# கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்



வேலணையூர் சுரேஷ்

# கீனவம் வேலியும் கிருகுத் தட்டியும்

வேலணையூர் சுரேஷ்



**கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்**

கவிதைத் தொகுப்பு


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | வேலணையூர் சுரேஷ் |
| பக்கங்கள் | : | 128 |
| முதற்பதிப்பு | : | நவம்பர் 2015 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| அட்டை ஓவியம் | : | செல்வன் |
| நூலழகு | : | வித்தியா.கு (நோபிள் பிரின்ரேர்ஸ்) |
| அச்சழகு | : | நோபிள் பிரின்ரேர்ஸ் |
| வெளியீடு | : | வர்ணம் கிரியேஷன்ஸ் |
| | | அளவெட்டி, யாழ்ப்பாணம். |


**Kiluvam Veliyum Kidukuth Thaddiyum**

(Collection Of Poems)


| | | |
|---|---|---|
| Author | : | Velanaiyoor Suresh |
| Pages | : | 128 |
| First Edition | : | November 2015 |
| Copy Right | : | Author |
| Cover Design | : | Selvan |
| Printed by | : | Noble Printers - Jaffna (nobleprinters@hotmail.com) |
| Layout & Design | : | Vidya.K (Noble printers) |
| Published by | : | Varnam Creations Alaveddy - Jaffna |
| Email | : | Varnam@gmail.com |

வெளியீடு:

வர்ணம் கிரியேஷன்ஸ்



## படையல்

ஒற்றைப் பொழுதும்
எந்தனைப் பிரியாமல்
இற்றை வரைக்கும்
என்னுள் வாழும்
உயிரினிய
நண்ப
**பு.சத்தியமூர்த்தி**
நினைவுகளுக்கு
இந்நூல் படையல்.

# கடவுள் வாழ்த்து

முழுதாய்க் கவியனைத்தும்
முறையாய்ப் புனைவதற்கு
வழுவின்றிக் காக்க வெள்ளைப்
புற்றடி விநாயகா சரண்



# அணிந்துரை

கவிஞர் வேலணையூர் சுரேஷின் "கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்" என்னும் கவிதைத் தொகுதிக்கு இந்த அணிந்துரையை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பல ஆண்டுகளாக எனக்குத் தெரிந்த ஒரு கவிஞர் அவர். ஓர் இலக்கியப் படைப்பாளி தன் சூழலை மறந்து இலக்கியம் படைப்பதில்லை. நாம் அன்றாடம் பார்க்கும் பல விடயங்களை இலக்கியப் படைப்பாளியும் பார்க்கிறான். ஆனால் அவன் அவற் றைப் பார்த்துச் சொற்களிலே தரும்போது அவை நம் மைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. அவ்வாறான பல கவிதைகளை வேலணையூர் சுரேஷின் தொகுதி யிலே படிக்கக்கூடியதாயுள்ளது.

இன்று பலர் வெளியே பேசாவிட்டாலும் மனதுக்குள்ளே வைத்தியசாலைகள், வைத்தியர்கள், வைத்தியத்துக்குச் செலவழியும் பெருந்தொகைப் பணம் பற்றியெல்லாம் குமைந்துகொண்டிருக்கிறார் கள். அந்நிலைமையை கவிஞர் ஒரு வசைக்கவி கூறு வதுபோல் 'காசு வைத்தியர்' என்னும் கவிதையாகத் தருகிறார்.

அந் நாட்களில்
வைத்தியர்
கைநாடி பிடித்தால்
காய்ச்சல் போம்
சளி போம்

நோச்சல் உடம்பிலும்
நோய் போம்.
இந் நாட்களில்
வைத்தியர்
கைநாடி பார்க்க
முன்னாடியே
லட்சம் போம்
எச்ச
சொச்சம் போம்...
எல்லாம் போம்...

சமூக அவதானிப்புத்தான். ஆனால் அதனைக்கூறும் முறையில் மன-திலே பதியவும் சிக்கலை ஆழமாக எண்ணவும் வைத்துவிடுகிறார்.

உமையம்மையின் முலைப்பாலுக்கும் தன்னுடைய தாயின் முலைப் பாலுக்குமுள்ள வேறுபாட்டைக் கவிஞர்.

உமையம்மை கொடுத்த
ஞானப்பால்
ஞானசம்பந்தனைக் கடவுளாக்கியது
அன்னை தந்த தாய்ப்பால்
என்னை மனிதனாக்கியது.
என்னும் கவிதை வரிகளால் கூறுகின்றார்.

புலம்பெயர் நாடுகளிலே அங்குள்ள உறை பனியிலும் இறுக்கமான நிலைப்பாடுகளுக்குள்ளும் உழைத்துப் பெறும் பணத்தினை இங்குள்ளவர்கள் பலருக்கு அங்குள்ளவர்கள் அனுப்பி ஒழுக்கச் சீர்கேடுகளையும் பண்பாட்டுப் பிறழ்வுகளையும் சோம்பேறித்தனத்தையும் உண்டாக்குகிறார்கள். அந்நாடு களிலே இருப்பவர்கள் இதுபற்றி எண்ணவேண்டிய நிலை உருவாகியுள்ளது. கவிஞரும் இந்நிலைப்பாட்டை அவதானித்துள்ளார். லண்டனிலுள்ள சின்ன வன் தொலைபேசியில் கதைக்கிறான். இங்குள்ள பெற்றோர் "நல்ல நேரத்தில் எடுத்தாய், நாங்களெல்லாம் இப்போ, சின்ன மருமகள் பார்க்கிறதில், மூழ்கிப் போய் இருக்கிறம்" என்றார்கள் "அப்படியா அம்மா" என்று சின்னவன் மகிழ்ந் தான். மிகுதியை கவிஞர்.

பெண்டாட்டி வரும் கனவில்
பிள்ளை லண்டனில்
குட்டிப் புளுகில் நித்திரையிழந்து

குப்பிறக்கிடந்து புரள்கிறான்
பாவம் பெடியன்
உடம்பைக் கயிறாய்த் திரித்து
உழைத்து உழைத்து அனுப்ப
அட "படுபாவிப் பெற்றோர்"
பார்க்கினமாம் "சின்ன மருமகள்"
நிஜத்திலல்ல சின்னத்திரையில்"

மனதைக் கவருகின்ற படிமங்களை கவிஞர் அமைத்துத் தன் கவிதை உணர்வுகளையும் செய்திகளையும் நமக்கு நன்கு உணர்த்திவிடுகிறார். "ஈர வரிகள்" என்னும் கவிதையை இங்கு எடுத்துக்காட்டாகப் பார்க்கலாம்.

என்
இதயம் அழுவதால்
உள்ளுக்குள் ஈரம்
விழிகள் அழுவதால்
வெளியில் ஈரம்

எனக் கவிஞர் உள்ளீரம் பற்றியும் வெளி ஈரம் பற்றியும் கூறுகின்றார். ஆனால் உள்ளீரமும் வெளியே வந்து கசியும். அந்த அற்புத நிகழ்ச்சியினைக் கவிஞர்,

இதயத்திலிருந்து
வருவதால்
வரிகளிற் கூட
ஈரம் கசிகின்றது.

என்ற வரிகளிலே கூறிவிடுகின்றார். படைப்பாளி ஒருவனால்தான் இந்தக் காட்சியினை நமக்குத் தரமுடியும் என்னும் உண்மை உணர்த்தப்படுகின்றது.

வேலணையூர் சுரேஷின் மொழியாட்சி சிறப்பாக அமைகின்றது. நம் நாட்டுச் சிறுகதை, நாவல் ஆகியவற்றிலே இடம்பெற்ற சிறப்பான பேச்சு வழக்கு நம்முடைய கவிதைகளிலே ஏன் இடம்பெறவில்லை என்னும் வினா எழுப்பப்படுகிறது. இந்த வகையில் சுரேஷ் கையாளும் பேச்சு வழக்கு கவிதை யுடன் இயைபாக்கம் பெறுகிறது. அவருக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக் களையும் கூறி இந்த அணிந்துரையை நிறைவுசெய்கிறேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# முன்னுரை

வேலணையூர் சுரேஷ் என்கிற இராமச் சந்திரன் சுரேஷ் அவர்களின் கவிதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதுவதற்கு புறப்படும் போது அருடைய பள்ளித்தோழன் பு.சத்திய மூர்த்தியைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

*1990*களில் உயர்ந்து நின்ற சுரேஷ், அதைவிட சற்றே உயரம் குறைந்த பு.சத்திய மூர்த்தி இருவரையும் சந்தித்தது தற்செயலாகத்தான்.

பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த அந்தப் பெடியன்களை (அப்போது பெடியன்கள்தான்) ஒரு நேர்முகத் தேர்வை நான் நடத்திக்கொண்டிருந்தபோது சந்தித்தேன். அவர்கள் வந்த நேர்முகத் தேர்வுக்கும் அவர்களுடைய ஆழ, நீளங்களுக்கும் தொடர்பில்லாதது போல எனக்குத் தென்பட்டது. இருவரையும் வேறு விதங்களில் பயன்படுத்தலாம் என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது அதனால் அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு வந்த பணிநிலை வழங்கப்படவில்லை.

அதன்பின்னர் அவர்கள் எனக்கு தோன்றாத் துணையானார்கள். சிறுமைகண்டு பொங்கும் இயல்புகொண்ட அவர்கள் அந்தக் குணாம்சம் காரணமாக எனக்குள் ஐக்கியமானார்கள்.

தீவிர முயற்சியும், சளைக்காத மனமும், எதையும் நுணுகி ஆராயும் தன்மையும், கொள்கை மாறாத குணமும், எடுத்த வேலையை முடிக்காமல் அடுத்த கட்டத்துக்குப் போகாத திட சித்தமும் கொண்டவர்களை யாரால்தான் புறம்தள்ளமுடியும்.

வெறும் இருப்புக்காகவும், அடுத்த நேரக் கதிரைக்காகவும், புகழ்மாலை, போலிப் பெருமைகள், உடனடிப் பிரபலம், செய்த வேலையைவிட செய்யாத வேலையையும் சேர்த்து உரிமை கொண் டாடி தாமே முன்னிலையில் நிற்பதாக மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்ட சூழலில் அவர்கள் அதற்கு நேர்மாறாக இருந்தார்கள்.

அதெல்லாம் பழங்கதை. எனக்கு எல்லாமாக இருப்பான் என நம்பிய பு. சத்தியமூர்த்தி அவலமாக எம்மைவிட்டல்ல உலகத்தை விட்டுப் பிரிந்துபோக சுரேஷ் அவனுக்காகவும் செயற்பட வேண்டியதாயிற்று.

சுரேஷ் அறிமுகமானபோது கவிதைகள் பால் காதல் கொண்ட வனாக இருந்தான். அதன் காரணமாக அவனை அவனது கவிதை களின் ஊடாகவே உந்தித் தள்ளினோம்.

அப்போது ஆற்றல் உள்ள எந்தப் படைப்பாளியையும் நாங்கள் சோர்ந்திருக்கவிட்டதில்லை. அவர்களால் எவ்வளவு தூரம் பறக்கவிடமுடியுமோ அது வரை பறக்கவைத்தோம். ஒரு நிலையில் இருந்து மறுநிலை என அவர்கள் உயர்ந்து கொண்டு இருந்தார்கள்.

அப்படித்தான் சுரேசும் செயற்படலானான். அப்போதெல் லாம் கவிதைகள்போல இசைப்பாடல்களும் எங்களுக்குத் தேவைப்பட்டன.

அதன் காரணமாக சுரேஷை நாங்கள் இசைப்பாடல்கள் எழுத ஊக்குவித்தோம். சட்டென பற்றிக்கொள்ளும் நெருப்பாக சுரேஷ் இசைப்பாடல்களினை லாவகமாக எழுதத் தொடங்கினான். வானொலிகளிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் அவனது இசைப் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின. குறிப்பாக இயற்கைவளம், பொருண்மிய மேம்பாடு போன்ற விடயங்களுக்கே நாங்கள்

முக்கியத்துவம் கொடுத்தோம். சுரேஷின் பாடல்கள் அவற்றினை சிறப்பாக வடித்தன. அவை இசையோடு சேர்ந்து எல்லோரையும் சொக்கவைத்தன.

ஒவ்வொரு நல்லூர் திருவிழாவின்போதும் சுரேசினால் எழுதப்பட்ட பாடல்களைக் கொண்ட இசைத்தொகுப்பு வெளியிடுவது வழக்கமாயிருந்தது.

சுரேஷ் இப்போதும் இசைப்பாடல்கள் எழுதுகின்றான். அது அவரின் அடுத்த கட்ட வளர்ச்சியாக இருக்கலாம். ஆன்மீக ரீதியான பாடல்களும் வெளிவரத் தொடங்கிவிட்டன. இத்தகைய பின்னணியிலே தான் சுரேஷின் கவிதை உலகிற்கு வரவேண்டியுள்ளது.

சுரேசுக்கும் கவிதைக்குமான தொடர்பு கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக இருக்கும் என நம்புகின்றேன். என் கணிப்பு சரியாக இருந்தால் "கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்" என்கின்ற இந்தத் தொகுப்பு அவருடைய நான்காவது கவிதைத் தொகுப்பாக இருக்கவேண்டும்.

அவரது முதலாவது தொகுப்பு வெளியீட்டு விழா நடந்த போது தான் அவர் எனக்கு அறிமுகமானவர்.

அவருடைய இரண்டாவது தொகுப்பு வெளியீட்டுவிழா கைலாசபதி அரங்கில் என்னுடைய தலைமையில் நடந்தது.

மூன்றாவது கவிதைத் தொகுப்புக்கு நான் முன்னுரை வழங்கினேன். இப்போது இது நான்காவது தொகுப்பு.

உயிர் வருத்தி கவிதைகளை எழுதி, உடல் வருத்தி அதனை நூலாக்கி வெளியிடுவது எத்துணை சிரமமானது என்பதை படைப்பாளிகள் உணர்வார்கள்.

இந்தச் செயற்பாட்டினை எல்லோராலும் செய்யமுடியாது. இதற்கு முயற்சி வேண்டும். தளராத முயற்சி வேண்டும். அப்படி முயற்சி இருந்தால்தான் 'அ' வில் இருந்து ஃ வரை வரமுடியும்.

ஒன்றில் இருந்து இன்னொன்றுக்கு மாறுவதற்கும் ஏற்றம் பெறுவதற்கும் உரிய மனப் பக்குவம் வேண்டும்.

மனிதக் குரங்கில் இருந்து வளர்ந்தவன் மனிதன் என்று சொல் வார்கள்.

வளரச்சியையும், மாறுதலையும் ஏற்றுக்கொண்ட மனிதக் குரங்குகள் மட்டுமே உழைப்பின் மூலம் கால வளர்ச்சியில் விலங் குகள் உலகத்தில் இருந்து தங்களை முறித்துக்கொண்டு மனிதர் களாகும் தகுதி பெற்றன என்பார்கள்.

எனவே வளர்ச்சியையும், சரியான மாறுதலையும் விரும்பு கின்ற ஒருவரால் நல்ல மனிதராக இருக்கமுடியும். ஒரு நல்ல மனி தரால்தான் நல்ல படைப்புக்களைத் தரமுடியும். ஆனால் இயல்பில் எல்லா மனிதர்களுமே படைப்பாளிகள்தான். தங்கள் சொல்லால் செயலால் அவர்கள் படைப்புக்களைத் தரமுடியும்.

"படைப்பாளி சாதாரண மனிதன் என்று இருவேறு கூறு களாக ஒருவரை நான் கூறுபோடுவதை விரும்புவதில்லை" என் பார் சிறுகதையாளரும் நாடக ஆசிரியருமாகிய ந. முத்துச்சாமி அவர்கள் "மனிதன் என்பவன் முக்கியமானவன். அவனிடத்தில் அவனது படைப்பாற்றல் ஒன்றிருக்கவேண்டும். அவனுக்கு எழுதத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. அவனது படைப்பாற்றல் அல்லாது அன்றாட நடவடிக்கையின் செயற்பாட்டால் வெளிப் படுத்தப்படும்.

அதனால்த்தான் காந்திஜி ஒரு நல்ல மனிதர். கவிஞர். அவ ரது வாழ்க்கைதான் அவரது மிகச் சிறந்த கலைப்படைப்பு அவர் தன் வாழ்க்கையையே கலைப்படைப்பாக்கியவர்" என்பார் நிஹால் ரஞ்சரே என்னும் அறிஞர்.

பொதுவாக படைப்பாளி சிறுமை கண்டு பொங்கும் இயல்பு கொண்டவனாக இருக்கவேண்டும். அடிப்படையில் அது ஒரு மனிதப்பண்பு. ஒரு நல்ல கம்யூனிஸ்ட் அல்லது நல்ல பொது வுடமைவாதி என்றால் அவன் நல்ல மனிதனாக இருப்பது என்பதுதான் அதன் அர்த்தம்.

ஒரு நல்ல மனிதன் ஏனையவர்கள் துன்பப்படும்போது துன்பப்படுவான். அவர்களின் கண்ணீரைத் துடைக்க முடியாத கையறு நிலையில் இருந்தாலும் கழிவிரக்கம் கொண்டு கலங்கு வான். சமயத்தில் நியாயம் பேசுவான்.

அவன்தான் நல்ல கவிஞன். நல்ல கவிஞன், தான் சார்ந்த மண், தனது சமூகம், தன் சூழல் எல்லாவற்றிலும் பற்றும் பாசமும் கொண்டவனாக இருப்பான் அப்படிப்பட்ட ஒருவனால்தான் நல்ல கவிஞனாக கிளர்ந்தெழ முடியும் என்பதை மகாகவி பாரதியாரை முன்நிறுத்தி நாங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இதன் அடிப்படையில் கவிஞர். த. பிச்சமூர்த்தி அவர்கள் கூறும் கருத்தினை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

தன் சொந்த வாழ்க்கையில் 'Sincere' ஆக இல்லாதவன் தன் எழுத்தில் Sincere ஆக எப்படி இருக்கமுடியும் எனக் கேட்கின்றார். அந்த Sincerity இல்லாத எழுத்தால் என்ன பிரயோசனம். அது எப்படி இலக்கியமாகும் எனவும் அவர் கேட்கின்றார்.

இதற்கும் நாங்கள் மகாகவி பாரதியை முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். பாரதி தன் சொல்லும் செயலும் ஒன்றாக இருந் தவர். அதனால்தான் அகத்தில் மூண்ட தீயை புறத்திலும் மூட்டி னார். பாரதி காலத்து புறச் சூழல் இந்திய விடுதலைப் போராட்ட காலச் சூழல். அவர் தனியே நாட்டு விடுதலை மாத்திரம் பேச வில்லை. பெண் விடுதலை, சமூக விடுதலை, பொருண்மிய விடு தலை, மூட நம்பிக்கையில் இருந்து விடுதலை எனப் பல்வேறு விட யங்களைத் தொட்டார். அதனால் அவர் இன்று வரை நிலை நிற்கின்றார்.

இந்த மனப்பாங்கு எல்லாக் கவிஞர்களிடமும் இருக்கவேண் டும். தார்மீக ஆவேசம், சிறுமை கண்டு பொங்குதல், நல்ல துக்காகப் பாடுபடல்.

இன்னுமொரு விடயத்தையும் நான் இங்கு குறிப்பிடவேண் டும். பாரதியார் காலத்துக்கு முற்பட்ட கவிதைச் சூழல் வேறு வித மானது. இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த மரபுக் கவிதை கோலோச்சிய காலம். ஆனால் பாரதி தான் எடுத்துக்கொண்ட பொருள் தனது மன உணர்வுகளை, தன் மனப்பொறிகளை வெளிப்படுத்த புதிய வடிவம் எடுத்தார். அதுவே அவரது கவிதை களாயின.

அவர் வாழ்ந்த காலத்தில் அந்தக் காலம் அவரைப் பாதித்தது. அதனைப்போல அவராலும் அந்தக் காலம் பாதிக்கப்பட்டது.

அவ்வாறு வாழ்வதற்கு நல்ல மனிதரால் முடியும். இங்கு பாரதியையும் அவன் தனிமனித ஆளுமை பற்றியும் நான் சுட்டிக் காட்டுவது அவசியமாயிற்று. படைப்பாளிகளில் பலபேருக்கு இவ் வாறாக முக விலாசம் இல்லை. பல படைப்பாளிகள் முகமூடிகள் அணிந்தபடி செயற்படுகின்றனர். அதனை விட முக்கியமானது நல்ல மனிதர்களும் அருந்தலாகிவிட்டார்கள்.

சமகாலச் சூழல் - ஒருவிதமான கவலை தரும் சூழலாகி விட்டது. மிக நீண்ட பாரம்பரியம் உடைய நாங்கள் எங்கள் பாரம் பரியங்கள் கட்டுடைத்துக்கொண்டு போகின்றோம்.

சிறுவர், சிறுமியர் வளர்ந்து வரும் பிள்ளைகள் அவர்களின் பழக்கவழக்கம் அவர்களின் பாதுகாப்பு எல்லாமே கேள்விக்கு உள்ளாகி உள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம், இளந்தலைமுறையின் குடிப்பழக் கமும் எங்களை எங்கே கொண்டு போய்விடப் போகின்றது.

பொறுப்பற்ற எதிர்காலம் பற்றிய பிரக்ஞை அற்ற பெற் றோருமே இந்த அவலத்திற்குக் காரணம். இது பற்றி மேலும் எழுத இது இடமில்லை.

ஆனால் எங்கள் ஒவ்வொருவருக்கும் சமூகப் பொறுப்பு இருக்கவேண்டும்.

அவ்வாறான ஒரு மனிதராக சுரேஷ் என்கின்ற ஒரு கவிஞர் உள்ளார். சிறுமைகண்டு பொங்கும் அவரின் குணாம்சம் அவரது பல கவிதைகளில் உள்ளன.

கவிதை கவிஞனின் அக மனத்தில் இருந்து வெளிப்படுவது. அதனை அவர் சொல்லும் விதத்தில்தான் அவனது வெற்றி தங்கி யிருக்கிறது.

கவிஞன் தான் காணுகின்ற அல்லது வெளிப்படுத்துகின்ற விடயத்தினை அப்படியே தொற்றவைத்தல் என்பது மிக மிக சிரம-மான விடயம்.

நல்ல கவிஞனின் கவி வரிகள் நம்மை மெய்சிலிர்க்க வைத்துவிடும். எமக்கு புதுப்பாதை காட்டி நிற்கும். இலக்கிய விமர்சகர் க.நா.சு. அவர்கள் கூறியதைப்போல "நல்ல கவி

யின் வார்த்தைகள் வாசகனின் உள்ளத்தில் மறைவாகக் கிடக்கிற அனுபவங்களில் ஏதோ ஒன்றைப் பாதாளக் கரண்டிபோல் பற்றி இருக்கிறது. நமது உறங்கிக் கிடக்கும் நம்மிடம் உள்ளதாக நாமே அறியாத அனுபவங்களை எழுப்பவல்லதாக இருக்கிறது.

கவிஞனுக்கு தான் வாழும் காலம் முக்கியமானது. அதுவே அவனை முதலில் பாதிப்பது. அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் அவர் தனது கவிதைகளை நுட்பமாக நெய்கிறான்.

நுட்பமாக கட்டப்படும் போதுதான் கவிதை தனித்துவம் பெறுகிறது. பொருத்தமான சொற்களை வைத்துக்கொண்டு அந்த ஒவ்வொரு சொல்லும் பல்வேறு அர்த்தங்களைத் தரக்கூடிய வல்லமை கொண்ட சொற்களாக அமையும்போதுதான்.பொறி தட்டும் கவிதை ஒன்று பிறக்கமுடியும். கவிதை எவ்வளவுக் கெவ்வளவு நுட்பமாக செதுக்கப்படுகிறபோதுதான் அதனை ஒவ்வொரு பக்கமாக நின்று ரசிக்கமுடியும். "கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்" என்னும் தலைப்பிலான இந்தக் கவிதைத் தொகுப்பில் கிட்டத்தட்ட 60 கவிதைகள் உள்ளன.

சுரேஷ் பல்வேறு பிரச்சனைகளை தன் கவிதைகள்மூலம் கொண்டுவருகின்றார். சமூகத்தின் பல்வேறு பிரச்சனைகளை அவை தொட்டுச் செல்கின்றன. அவ்வாறு தொடுவதன் ஊடாக கேள்விக்கு உட்படுத்துகின்றார். விமர்சனம் புரிகின்றார்.

எல்லாக் கவிதைகளையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக அமையாத காரணத்தால் சிலவற்றை மாத்திரம் சுட்டிக் காட்டலாம் என எண்ணுகின்றேன்.

எது "கவிதை" என்னும் தலைப்பில்

"உணர்வுப் பொறி
கிளம்ப
மூளை நரம்புகள்
ஒடுங்க
எனக்குள் நிகழும் பிரசவம்
கவிதை"

என தன் கவிதை அனுபவத்தை சொல்கின்றார். இந்த உணர்வுப் பொறியே அவரது சகல கவிதைகளின் ஊடேயும் இழை யோடிப்போய் இருப்பதை அவதானிக்கலாம்.

அவரது உணர்வுப் பொறி பற்றியெரிந்த இடம் ஒன்று உள் ளது. அவரை மட்டுமல்ல அவரைப் போன்ற பலரின் உணர்வு களை பற்றியெரிய வைத்த அந்தக் கடற்கரை சார்ந்த மணல் வெளி யில் நடந்த அவலங்களையும் வேதனைகளையும் யார் யாருக்கு சொல்லமுடியும். சொல்லித்தான் என்ன பிரயோசனம் என்று இருக்கிறது சமகாலச் சூழ்நிலை. ஒன்றாக கஸ்டப்பட்டவர்கள் வலிசுமந்தவர்கள் எல்லாம் ஆளாளுக்கு குழி பறித்து தத்தமது இருப்புக்களையும் நலன்களையும் தேடி ஓடிக்கொண்டு இருக்கும் போது உயிர் விலை என்பது இப்போதும் கேள்விக்குரியதாகத் தான் உள்ளது.

சுரேஷின் உயிர்விலை என்னும் தலைப்பிலான கவிதை பின் வருமாறு அமைகிறது.

"ஓ
எல்லாமே
நல்ல விலை போனது
அங்கே
சும்மா போனது
எம் உயிர்கள் மட்டும்தான்"

இதற்கான விடையும் அவருடைய வேறொரு கவிதையில் வருகிறது.

"இந்த மண்ணில்
முளைத்த
ஒற்றையொரு
காரணத்திற்காய்
பச்சை மரங்களும்
காயப்பட்டன.
எரியூட்டப்பட்டன.
தலை சீவப்பட்டன."

தனியே எங்கள் பிரச்சனையை மாத்திரம் கண்டு அவர் மனம் பதைபதைக்கவில்லை. உலகத்து மாந்தர்களினதும், சகல

அரசாங்கங்களினதும் கேடுகெட்ட நடவடிக்கைகளால் பாழாய்ப் போய்க்கொண்டிருக்கின்ற "பூமி" தொடர்பாகவும் அவர் கேள்விக் குட்படுத்துகின்றார்.

"இல்லையே
அணுகுண்டைக்
கண்டுபிடித்தவர்களால்
இந்தப் பூமியின்
ஒரு துண்டைத்தானும்
படைக்க முடியுமா?

என்ற அவருடைய கேள்விக்கு யார்தான் பதில்சொல்லமுடியும்?

பிள்ளை வெளிநாட்டில் - பெற்றவர்கள் முதிர் பிணங்களாக வீடுகளில் - சிலவேளை செத்து மணக்கும்போதுதான் அயலவர்கள் வந்து பார்க்கும் சூழ்நிலையில் எத்தனை ஆயிரம் பெற்றோர் எமது புறச்சூழலில் தவித்த வாய்க்கு கஞ்சி கிடைக்காது கருகிச் செத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இதையே கவிஞர் பின் வருமாறு கேட்கின்றார்.

"உயிரிருக்க வந்து பார்த்து
உச்சிமுகந்து
அன்னமிட்டு
"அம்மா" என்றழைக்கும்
ஒற்றைச் சொல்லுக்கு
ஈடாகுமோ உலகிலேதும்?"

இத்தகைய ஒரு பிரச்சனையே பிள்ளைகள் ஊரில் உள்ள தாய் தகப்பனுக்கு நடப்பதை கவிஞர் கோபத்துடன் சுட்டிக் காட்டுகின்றார்.

பெற்றோர் முதுமை அடைந்துபோகும்வரை அவர்களிடம் பழம் பறித்த பிள்ளைகள் பெற்றோர் செயற்படமுடியாத நிலையில் அவர்களை சுமையாகக் கருதி முதியோர் விடுதிகளில் சேர்த்து விட்டு தாம் "ஹாயாக" இருக்கின்றனர்.

எந்தவிதமான மனச்சாட்சியும் இல்லாது செயற்படும் இத்தகைய பிள்ளைகள் "நாமும் நாளை முதியோர்தான்" என்பதை உணராமல் செயற்படுவதை கவிஞர்

“மனைவியை அம்மா என்கிறாய்
அன்னமிட்டவளை
அனாதை இல்லத்தில்
தள்ளிவிட்ட
அயோக்கியத்தை மறந்து”

நவீன இலத்திரனியல் சாதனங்களால் தொலைந்து போய் விட்ட எமது வாழ்வு முறையும் பண்பாட்டு விழுமியங்களையும் கூட கவிஞர் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

“லண்டன் சின்னவனும் சின்ன மருமகளும்” என்னும் தலைப் பிலான கவிதை அத்தகைய சீரழிவுகளை பட்டியல் போடுகிறது. இறுதியில் “போதை

புகையும் மதுவுமா
மெகாவும் தான்
யாராவது சொல்லுங்களேன்
மெகாவை விடவா
குடி குடியைக் கெடுக்கும்.”

வறுமைப்பட்டோர் தொடர்பாகவும் கவிஞர் அதிக அக் கறை எடுப்பதை அவருடைய பல கவிதைகளில் காணலாம்.

அவற்றுக்கெல்லாம் உச்சமாக இந்தக் கவிதையைக் குறிப்பிட லாம் என நினைக்கின்றேன்.

“கந்தலுடன் நிற்கும்
ஏழைகள் வயிறு
பற்றி எரிகிறது
கந்தசுவாமி கோயில்
கற்பூரம்போல
அக்கினிக்கு
யார் யாரோவெல்லாம்
வந்து
தாரைவார்க்கிறார்கள்
அப்பனே முருகா என்றபடி
யார் கண்களுக்கும்
தோன்றவில்லைப்போலும்
பக்கத்தில்

கந்தலுடன் நிற்பது
கந்தன் என்பது?"

இந்தத் தொகுப்பில் உள்ள பல்வேறு கவிதைகள் ஊடாக கவிஞனின் மனப்பாங்கினை ஓரளவேனும் வாசகர்கள் புரிந்து கொள்ளமுடியும்.


இருபத்தைந்து வருட கவிதை அனுபவத்தாலும் பல்வேறு வகைப்பட்ட வலி நிறைந்த காலங்களின் கள அனுபவங்களையும் கொண்ட சுரேஷின் இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் அவருடைய கவிதைத் தரம் எவ்வாறு உள்ளது. இவற்றின் ஆழ நீளங்கள் தொடர்பில் வாசகர்கள், விமர்சகர்கள் என்ன கருத்துக்களை முன்வைக்கப்போகின்றார்கள் என்பது தொடர்பில் நான் எந்த எதிர்வுகூறலையும் கூறமுடியாது. அது என்னுடைய பணியுமன்று.

1990களில் எத்தகைய கொள்கைப் பிடிப்போடும், செயற்பாட்டு வேகத்தோடும் நான் கண்ட சுரேஷிடம் அவை இப்போதும் அப்படியேதான் உள்ளது. அதுவே இந்த முன்னுரையை நான் எழுதக் காரணமாயிற்று.

காலத்துக்கேற்றமாதிரி நிறங்களையும் பூசிக்கொண்டு முகமூடிகளையும் மாற்றும் சுபாவம் அவருக்கு இல்லை. கவிதைத் தரத்தை விட மாறாத கருத்தின் தரமே முக்கியமானது என்பதே என் கருத்து. "அன்று அதற்காக அங்கு இருந்தோம். இன்று இதற்காக இங்கு இருக்கின்றோம்". என்ற மாதிரியான அறிக்கைகளை அவர் விடாதவரை அவர் மதிக்கப்படுவார்.

படைப்பாளியின் படைப்பின் தரத்தைவிட அவன் நடத்தைத் தரம் செயற்பாட்டுத் தரம் மேலாண்மை மிக்கதாக இருக்கவேண்டும். சொந்த வாழ்க்கையில் தில்லுமுல்லுக்களைச் செய்யும் எவருமே அவரின் படைப்பு எந்தத் தரமாக இருந்தாலும் நிராகரிக்கப்பட வேண்டியவர்களே.

**இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன்.**
அப்பலவாணர் வீதி
உடுவில் கிழக்கு
சுன்னாகம்.





காலமது கனிந்துவைத்த கலைமனசாம் - நல்ல
கவிதைத்தமிழ் செதுக்கிவரும் கவிஞனுமாம்
மூலமெனும் தமிழினத்தின் மூச்சாய் வாழ்ந்து - பல
முள்வலிகள் கடந்துவரும் பயணியுமாம்
சீலமிகு தமிழ்த்தாய்க்குப் புதல்வனுமாம் - இனிய
செம்மைமிகு பண்புகொண்ட ஆளுமையாம்
வேலணையாம் வித்தகக் கவிஞன் சுரேஷ் எனும் - இந்த
நூலழகன் எழுத்தெல்லாம் வீரியமாம்

ஐம்புலனின் அனுபவமும்
அறிவுச்சுடரேற்றும் ஆற்றலதும்
இன்பதுன்பமவை கலந்துலவும்
எழுத்துத் தவமியற்றும் பேரழகும்
உன்னத கலையதனின் உள்ளொளியும்
உள்ளம் முழுவதிலும் அன்புணர்வும்
சின்ன உடல் சிரிப்பு முகம் காட்டி
செல்லும் இடமெல்லாம் பழகுவதும்
முன்னம் வந்துதவும் முழு நட்பும்

முன்மாதிரியாய் வாழும் இலக்கணமும்
பொன்னின் பொறுமையும் புத்திக்கூர்மையும்
புதுமையும் பூமனசும் மனிதமும்
என்ன அதிசயங்கள் இவனுக்குள்
எல்லாம் இறையருளின் தரிசனங்கள்
உண்மை உயர்கவிஞா உன்தமிழால்
உலகம் உள்ளவரை புகழ்சேர்ப்பாய் வாழி!

அஞ்சாறு குஞ்சுகளை அடைகாத்த
அருமைத் தாய்க்கோழியின் அன்பைப்பெற்று
மிஞ்சி இருக்கும் இந்த மெலிஞ்ச உடலுக்குள்
மிடுக்காய் வாழும் தமிழைப் பார்த்து
நெஞ்சம் பூரிக்கும் நட்புணர்வில் நின்று
நிறைவாய் நிறைவாய் வாழ்த்துகின்றேன்
விஞ்சும் வித்தகக் கவிஞன் எங்கள்
வேலணையூர் சுரேஷ் நீ வாழி...

எழுத்தில்
**கவிஞர் கு.வீரா**



# பதிப்புரை

கவிஞர் கு.வீரா ஏற்றிய இரண்டாம் உயிரின் ஒளிக்கீற்றில் "வர்ணம் கிரியேஷன்ஸ்" ஆக்க வெளியீட்டகத்திற்கு நான்காம் உயிராய் பிரசவிக்கிறது அன்புத்தம்பி கவிஞர் வேலணையூர் சுரேஷ் அவர்களின் "கிளுவம் வேலியும் கிடுகுத்தட்டியும்" எனும் கவிதைத் தொகுப்பு. அவருக்கும் இது நான்காவது பிரசவம். ஒரு படைப்பாளியின் சிறந்த படைப்புக்கு கரம் கொடுத்து வெளி யீடு செய்வதில் "வர்ணம் கிரியேஷன்ஸ்" ஆக்க வெளியீட்டகம் பெருமையடைகின்றது.

அன்புத் தம்பி கவிஞர் வேலணையூர் சுரேஷ் அவர்கள் 1991ம் ஆண்டு காலப்பகுதியில் காற்றில் அடிபட்டுவரும் பஞ்சாக உந்துருளியில் வந்திறங்கி வெற்றிலை வாயனின் வரவேற்போடு என் அருகினில் அமர்ந்தவன். அன்றிலிருந்து இன்றுவரை என் நெஞ்சினுள் அமர்ந்தவனாய், அன்பினில் உயர்ந்தவனாய், ஆற்றல் பெருகி வளர்ந்திட்டபோதும், தடுமாற்றம் ஏதுமின்றி மாற்றம் வேண்டி ஏமாற்றமின்றி பயணிக்கும் இறுமாப்புக்காரன். இவனின் உள்ளத் தூய்மையினை இவனோடு பழகியவர்கள் நன்கு அறி-வர். மூத்த கலைஞர்களை போற்றி மதிக்கும் பண்பு நிறைந்தவன். நான் வியக்கும், மதிக்கும், என்னுள்ளே சுமக்கும் கவிக் கற்பகதரு புதுவை இரத்தினதுரை அவர்களின் நிழலில் வளர்ந்த திமிர் உள்ளேயிருந்தாலும் வெளியே காட்டா தன்னடக்கம் இவனுக்கு.

இவனின் படைப்புகள், அசைவுகள் ஒவ்வொன்றையும் அரு கிருந்து இரசித்து வெளிச்சத்தில் இவனைப் பார்த்த காலங்கள் என்றும் மறக்கமுடியாதவை. காலத் தேவையுணர்ந்து கவி படைப் பதில் கெட்டிக்காரன். கவி படைப்பதோடு நின்றுவிடாமல் சமூகத் திற்கு தேவையான பாடல்களையும் அழகுற இயற்றும் வித்தகக் கவி ஞன் இவன்.

சுரேஷின் பாடல் வரிகளுக்கு மெட்டுக்கட்டி இசையமைத்து எனது குரலில் காற்றலைகளில் தவழவிட்ட சில பாடல்கள் என்றும் அழியாதவை. பக்திரசம் சொட்டுபவை. இப்படி இவனுக்கும் எனக்குமான நட்பு இன்றுவரை நீண்டே செல்கிறது.

படைப்பாளிகளின் படைப்புகளை தடையின்றி வெளிக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தபோது பலரின் கிடப்பில் கிடக்கும் படைப்புகளைப் பற்றி குறிப்பிட்டு வெளிக்கொண்டுவரத் துடித்தவர்களில் இவனும் ஒருவன். எனது தந்தையாரும் குருவு-மாகிய இசைமேதை அமரர் வர்ணகுலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாய் ஆரம்பிக்கப்பட்ட "வர்ணம் கிரியேஷன்ஸ்" எனும் ஆக்க வெளியீட்டகத்தின் செயற்பாட்டாளர்களுள் இவனும் ஒரு வன்.

வேலணையூரன் வேலனின் பேரன்
கூர் அறிவுகொண்டு கவி தீட்டிடும் தீரன்
புதுவை அண்ணனின் பேனா மைச் சிதறல்களை
தாங்கி அருகிருந்து இரஸித்தவன், புஸித்தவன்
பசித்த இவனின் தேடலுக்கு...
ஊரில் உள்ள நான் போற்றும்
ஏனைய பேரறிவாளர்களின் படையல்களும் விருந்தாகின...
ஐயம் தவிர்த்து இரஸித்து உண்டான்...
எனினும் உறங்கலானான்...
தீட்டிய மதியுடன் உறுமீனுக்காய் காத்திருக்கும் கொக்கானான்
கால இடைவெளிகளை நிரப்ப...
இறைவன் நமக்களித்த வரங்களுள் ஒருவனாய்
இன்று இவன் நம்மோடு...
தான் மட்டும் வாழாது பிறரும் வாழ நினைப்பவன் - அதனால்
நண்பர்களையும் கவிபடைக்க வைத்து அகமகிழ்பவன்
"வர்ணம் கிரியேஷன்ஸ்" ஆக்க வெளியீட்டகத்தின் ஊக்கம் இவன்.
எனக்கு கிடைத்த தூய்மையான தம்பிகளுள்
இவனும் ஒருவன் என்ற மகிழ்ச்சி எனக்கு.
தம்பியுடையான் எதற்கும் அஞ்சான்
பனிதேசத்தில் நான் வாழ்ந்தாலும் தொடரும் என் பணி
இவன் போன்றவர்களுக்காய் இனி...

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த இன்றைய காலகட்டத்தில் அரையும் குறையுமாய், அம்மணமாய் பார்க்கவோ, படிக்கவோ, கேட்கவோ முடியாமல் வெளிவரும் படைப்புக்கள் குறைப் பிரசவங்களாக பணம் படைத்தவர்களின் உதவிகளோடு உலா வருவது என்பது மிகவும் வேதனையாகிவிட்ட இத்தருணத்தில், முகப்புத்தகத்தில் சிலர், இணையத்தில் சிலர், ராப் இசையென்றும், வ்யூஷன் என்று சிலர், எப்படியெல்லாம் கருச்சிதைப்பு, உருச்சிதைப்பு செய்யமுடியுமோ அதனை நிகழ்த்தி இன்று சாதனையாளர்களா கவும் பலர் நம்மிடையே வலம் வருகின்றார்கள். இவற்றை பார்த்து பொறுமையிழந்து ஏதாவது சொல்லப்போனால் ரெண்ட் தெரி யாமல் இருக்கிறீர்கள் என ஹின்ற் அடிக்கிறார்கள். பிழைக்கத் தெரியாதவர்கள் என்ற பரிதாபப் பார்வையோடு எமைப்பார்த்து ஒரு நக்கல் சிரிப்பு வேறு. யாரொடு நோவது யார்க்கெடுத்து உரைப்பது. முன்பு உடையார் இல்லாவிட்டால் ஒருமுழம் தான் கட்டை இப்போ பல முழங்கள். இருப்பதையாவது பாது காப்போம் முடிந்த அளவுக்கு நல்ல படைப்புகளை வெளிக் கொண்டு வருவோம் என்பதோடு நமக்கு நாமே ஒரு விதி சமைப்போம் என உருவாக்கப்பட்டதே "வர்ணம் கிரியேஷன்ஸ்" இது பணம் கொண்டு ஆரம்பிக்கப்படவில்லை. நல் மனங்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பங்குதாரர்கள் வாசகர்களாகிய நீங்களே.

எமது தொடர் முயற்சிகள் வெற்றிபெறுவதோடு, நல்ல படைப்புகள் வெளிவரவேண்டும் என்று நினைப்பவர்கள் உங்கள் கரங்களையும் மனங்களையும் எம்மோடு இணையுங்கள். படைப் பாளிகள் எம்மோடு இணைந்திருங்கள். தமது சொந்த ஆக்கங் களை வெளியிட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் படைப் பாளிகளின் ஆக்கங்கள் வெளிவர உங்கள் ஊக்கங்களையும், கருத்துக்களையும் வரவேற்கின்றோம். ஊடக நண்பர்கள் ஆரோக் கியமான எமது பயணத்தைப் புரிந்து மக்களுக்கு எமது காத்திர மான ஆரோக்கியமான படைப்புகளை சுமந்து எடுத்து செல்ல உதவுங்கள். உலகெங்கும் சிதறி வாழும் தமிழ் உறவுகள் இந்தப் படைப்புகளை சுமந்து எடுத்து செல்ல உதவுங்கள். உலகெங்கும் சிதறி வாழும் தமிழ் உறவுகள் இந்தப் படைப்புகளை முதலில் நீங்கள் பெற்று அனுபவிப்பதோடு இதில் ஈடுபாடுகொண்ட ஆர்வலர்களையும் இணைக்க வழிசெய்வீர்களானால் உலகத்

தமிழ்ப் படைப்பாளிகளை கலைஞர்களை ஒருங்கிணைக்கும் எமது பணி இலகுவாகும். ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு. இல்லையேல் தாழ்வு அனைவருக்குமே.


காலக் கட்டளை ஏற்றுப் பயணிக்கும் கலைப் பயணத்தில் எம்மோடு இணைந்த நல் உள்ளங்களுக்கும், இந்நூல் வெளிவர துணையாய் நின்ற தம்பி கவிஞர் கு.வீரா, வடிவமைப்பு செய்த சகோதரி வித்தியா, செல்வம் அண்ணா, என்றும் ஊக்கமாய் வழிகாட்டி எம்முடன் பயணிக்கும் ஆக்கவெளியீட்டு நிபுணரும் பிரபல எழுத்தாளருமான இராதேயன் அண்ணா மற்றும் இந் நூலிற்கு ஆக்கங்கள் வழங்கிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும் மூத்த எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் அவர்களுக்கும் இந்நூலை சிறப்புற அச்சிட்டு தந்த Noble Printers நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் தாயகத்திலும் புலம்பெயர்ந்த மண்ணிலும் எமது வெளியீடுகளை அறிமுகம் செய்ய துணையாய் நிற்கும் அனைவருக்கும் எமது "வர்ணம் கிரியேஷன்ஸ்" சார்பில் நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

"வர்ணம் கிரியேஷன்ஸ்" எனும் எமது ஆக்கவெளியீட்டகத்தின் நான்காவது வெளியீடான கவிஞர் வேலணையூர் சுரேஷ் "கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்" எனும் இக்கவிதைத் தொகுப்பை உலகத்தமிழ் மக்களாகிய உங்களிடம் கையளிப்பதில் என்றும் உங்களை நேசிக்கும் உங்கள் கலைஞன் வர்ணராமேஸ்வரனாகிய நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூல் வெற்றிபெற தம்பி சுரேஷ் அவர்களை வாழ்த்துவதோடு கலைகளும், கலைஞர்களும் தடையின்றி வாழ, வளர அனைவரும் முன்வந்து கைகொடுக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு அடுத்த வெளியீட்டுடன் உங்கள் அனைவரையும் சந்திக்கும் ஆவலோடு விடைபெறுகின்றேன்.

"வர்ணம் கிரியேஷன்ஸ்"
**"Varnam Creations"**
A.M.VARNAKULASINGAM,
SIRUVILLAN,
ILAVALLAI,
SRILANKA.
001(416) -265-8884

69 RANDALL AVE,
MARKHAM, ONT,
L3S 1E2,
CANADA.
varnam@gmail.com




கவிதை என்பது ஒரு வரம்.
எழுதுவது என்பது தவம்.

சும்மா கிறுக்கி விடுவதோ அல்லது அவிழாத முடிச்சுக்களால் இறுக்கி விடுவதோ கவிதை ஆகாது. எய்தவேண்டிய இலக்கினை எய்துவதும் - தான் செய்யவேண்டிய வேலையினைச் செய்வதனையும் ஒரு நல்ல கவிதை கனகச்சிதமாய் நிறைவேற்றிவிடும். சேரவேண்டிய இடத்தினைச் சேர்ந்தால்தான் நதிக்குச் சிறப்பு. அடையவேண்டிய இலக்கினை அடைந்தால்தானே கவிதைக்குச் சிறப்பு. வெறுமனே சும்மா தரம் - திறம் என்று கூறிக்கொண்டு படைத்த பிரம்மனுக்கே விளங்காத புதிர்களை படைத்து யார்க்கு என்ன லாபம்?

உணர்வின் வார்த்தைகள் வரிகளுக்குள் உறங்கிப் போகாமல் வாழ்க்கையில் நாலு பேரின் மனதைத் தொடுமாக இருந்தால் அது போதும் எனக்கும் - என் கவிதைக்கும்.

"கிளுவம் வேலியும், கிடுகுத் தட்டியும்" இது என் நான்காவது வரவு. நீண்ட இடைவெளிக்குப் பிறகு சிலரின் வேண்டுகோளிற்கு இணங்கத் தயாரானது இந்த முயற்சி. என் பள்ளிப் பராயம் முதல் நான் கண்ட முதல் இலக்கியவாதி என் மாமனார் வே.பொ. மாணிக்கவாசகர் அவர்களின் ஆசியுடன் கலை இலக்கியத் தளத்தில் இறங்கியவேளை என் படைப்புகளைச் சீர்தூக்கிப் பார்த்து நேர்வழிப்படுத்தி இன்றுவரை அரிய உறவாய் இருந்து ஆசுவாசப்படுத்துபவர் மூத்த படைப்பாளி இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள்.

மற்றும் மானசீகக் குருவாய் நான் போற்றும் பெருங்கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் என்னைப் பிள்ளையாய் ஏற்று எல்லைகடந்து வளரும் ஆற்றலை ஆளுமையை அன்றே என்னில் ஊட்டியவர். இவர்கள் போல் மூத்த படைப்பாளி ராதேயன் அவர்கள். இன்று இந்த நூலின் வரவுக்கு முதற்காரணமே அவர்தான். சும்மா இருக்கவிடாமல் எதையாவது எம்மை செதுக்கச் சொல்லிக் கொண்டிருப்பது இவரின் குணங்களில் ஒன்று.

கிடப்பில் கிடந்த என் கவிதைகளைப் பொறுக்கி நூலாக்கி 'கடப்பு'த் தாண்டி வரக் கை கொடுத்தவர் நான் உயிர்வைத்துப் போற்றும் என் அன்புப் பொக்கிஷம் அண்ணர் இசைக் கலைமாமணி வர்ணராமேஸ்வரன் அவர்கள்.

வர்ணம் கிரியேஷன்ஸ் நிறுவனத்திற்கும் இது நான்காவது வெளியீடு.

நூலின் முகப்பழகை அழகாய் ஆக்கி பெருமை சேர்த்த ஓவியர் செல்வன் அவர்களுக்கும் நூலினை வடிவமைப்புச் செய்து வடிவு பார்த்த சோதரி வித்தியாவிற்கும் நேர்த்தியாக பதிப்புச் செய்து எம் ஆசையைப் பூர்த்திசெய்தளித்த நோபிள் பதிப்பகத்தினருக்கும் குறிப்பாக சிறீதருக்கும் என் நன்றிகள்.

எல்லா முயற்சிக்கும் என் விரல்களில் ஒன்றாய் கூடவே பயணிக்கும் சக படைப்பாளி ஐயா கவிஞர் கு. வீராவுக்கும் மற்றும் சரவணன், நிஷாகரன், மயூரரூபன், ஜோசப் அண்ணன் வேலணையூர் பா.சசிக்குமார், செல்வம் போன்றோரின் அன்பை, மறப்பதற்கில்லை.

என் படைப்புகளுக்கெல்லாம் இனம்புரியாத ரசிகர்களாய் இருந்து படித்தும் கேட்டும் என்னைப் பண்படுத்துபவர்கள், உறவுக் கவிஞன் வேலணையூர் பொன்னண்ணா, எஸ்.பி. சாமிஐயா ந. பரணிதரன் (வேலணை), நீராவியடிச் சிவா, சி. மருதூரன் (அவுஸ்திரேலியா), ச. கண்ணன் (நதியா நகைமாடம்), போன்ற இனிய உள்ளங்களை அன்பு பாராட்டி மகிழ்கின்றேன்.

என் எல்லா முயற்சிக்கும் துணை நிற்கும் என் அம்மா இ. இராசலட்சுமிக்கும், உடன்பிறப்புக்கள் இ.ரமேஷ், இ.ரணேஷ், இ.டிணேஷ், ச. சிந்துவுக்கும் என்பணி சிறக்க எல்லாமுமாகி நின்று என்னைத் தாங்கும் என்னவள் நிரஞ்சினிக்கும் என் பிள்ளைக் கனிகள் தேனாள், யதன், யுதனுக்கும் எனது நன்றிகள். இத்தனை பேரின் அன்பும் ஆதரவும் உள்ளவரை என் கலைப்பயணம் தொடரும். மற்றொரு நூலுடன் சந்திக்கும் வரை அன்பு கூறி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

**வேலணையூர் சுரேஷ்**
(இராமச்சந்திரன் சுரேஷ்)
வேலணை கிழக்கு,
வேலணை.

# தாய் மொழி

நான் பேசும் மொழியன்றோ
நற்றமிழ் என் விழியன்றோ
தேனூறும் சுவையன்றோ
தீந் தமிழ்போல் சுகமுண்டோ

வானளந்த தமிழன்றோ
வள்ளுவன் வாய் மொழியன்றோ
கூன் வீழாக் குமரன்றோ
குமரென்றன் திமிரன்றோ

வாய்க்கு நீ விருந்தம்மா
நோய்க்கும் நீ மருந்தம்மா
தாய்க்கும் நீ தாயம்மா
தவமே எனக்கு அருள்தாம்மா

# அம்மா

அன்புக்கு
அர்த்தம் சொல்ல
ஒரு சொல் போதும்.
"அம்மா"

கோடானு கோடி
சொற்களாற்கூட
அம்மாவுக்கு அர்த்தம்
கற்பிக்க முடியாது!

உளத்
தூய்மையின் வடிவம்
தாய்மை

பிரபஞ்சத்தையே
சிருஷ்டிக்கவல்ல
ஓர் புனிதப் படைப்பு

முத்தத்தால்
முகம் சிவக்கச் செய்பவள்
அம்மா!
தன் இரத்தத்தை
முதற்தரப் பாலாக்கி
மூவேளையல்ல
முழுவேளையும் ஊட்டுபவள்
அன்னை!

ஓ...
உமையம்மை கொடுத்த
ஞானப்பால்
ஞானசம்பந்தனைக் கடவுளாக்கியது
அன்னை தந்த தாய்ப்பால்
என்னை மனிதனாக்கியது
பாசத்தின் திறவுகோல் அம்மா!

அன்னையைப் பாடுவதற்கு
எந்த ஜீவனுக்கும்
அருகதை கிடையாது.
அந்த ஜீவன் கூட
அவளுடையது தானே!
அவள் தந்தது தானே!

# எது கவிதை

எழுத
வரும் என்று இருக்க
வராமல் இருப்பது கவிதை

ஒன்றும்
வராது என்று நினைக்க
வந்து குதிப்பது கவிதை

உணர்வுப் பொறி
கிளம்ப
மூளை நரம்புகள்
ஒடுங்க
எனக்குள் நிகழும் பிரசவம்
கவிதை

பட்டத்து ராணி
கவிதை

அவள் பவனி வரும் தேர் தான்
எழுத்துக்கள்.

வீணை நரம்புகள்
அதிர்ந்தால் கானமாகும்.
உணர்வு நரம்புகள்
அதிர்ந்தால் கவிதையாகும்.

உள்ளுக்குள் சுழன்று
முட்டி மோதி
பெரு மூச்சாய்
வெளிக் கிளம்புவது தானே கவிதை

எது எப்படியோ
எதற்குள் இருந்து
கிளம்பியதோ
இன்னொருவரின்
அதற்குள்
இறங்கினால்
அது கவிதை

# கடன்

இன்று
யாரைக் கேட்டாலும்
கடன்
கடன்
என்கிறார்கள்.

வங்கிக் கடன்
வீட்டுக் கடன்
அடைவுக் கடன்.

யாருக்குமே
ஞாபகத்திலில்லை
பட்ட
நன்றிக் கடன்!

# நிழல்

பிறரின் நிழல்
கிடைக்கவில்லையே
என்பதற்காய்
பீற்றுகிறாய்
பிதற்றுகிறாய்
உன் நிழலிலேயே
உட்கார முடியாத நீ!

# உயிர் விலை

*1கி.கி. அரிசி 2600 ரூபா*
*100கிராம் சீனி 1100 ரூபா*
*100கிராம் செத்தல் 2800 ரூபா*
*2 பனடோல் 500 ரூபா*

ஓ....
எல்லாமே
நல்ல விலை போனது
அங்கே
சும்மா போனது
எம் உயிர்கள் மட்டும் தான்

# காசு வைத்தியர்

அந் நாட்களில்
வைத்தியர்
கை நாடி பிடித்தால்
காய்ச்சல் போம்
சளி போம்
நோச்சல் உடம்பிலும்
நோய் போம்

இந் நாட்களில்
வைத்தியர்
கை நாடி பார்க்க
முன்னாடியே

லட்சம் போம்
எச்ச
சொச்சம் போம்
ஏக்கத்தில்
மிச்சமிருந்த
உயிர் போம்
மொத்தத்தில்
எல்லாம் போம்
போம்! போம்!

# வெப்பமாகிறது பூமி

அம்மைத் தழும்புகளாய்
பூமித்தாயின்
மேனியிலும் கொப்பளங்கள்

ஏழை வயிற்றுச்
சுருக்குகள் போலவே
பூமி மண்டலத்திலும்
ஆயிரம் வெடிப்புக்கள்

கொதிக்க வைத்த
எண்ணைத் தாச்சி போல்
இந்தக் கணமும்
தணலாய்த் தகதகக்கிறது
பூமி
மரம் செடி, கொடி
ஜீவராசிகள்

எல்லாமும் விடும்
மூச்சுக் கூட சுடுகிறது

குளிரோடை
மரநிழல்
இதமான காற்று
ஒன்றுமே இல்லாத
பாலைவனமாகவா
படைக்கப்பட்டது
இப்பூமி?

இல்லையே
அணு குண்டைக்
கண்டுபிடித்தவனால்
இந்தப் பூமியின்
ஒரு துண்டைத் தானும்
படைக்கமுடியுமா?

மனிதனே
வெப்பமேற்றுகின்றான்
பூமித்தாயின் கர்ப்பம்
கலைந்துபோக?

# எம்மூர் நேற்றும் - இன்றும்

ஊராய் இருந்தது
எம்மூரும் ஒரு காலம்.

குடும்பம் ஒவ்வொன்றும்
ஆல்போல்
குடைபரப்பி இருந்த காலமது.

அத்தனை சொந்தங்களும்
முற்றத்துக்
கொத்து மல்லிகைபோல்
பூத்துப் பொலிந்திருந்த
பொழுதுகள் அது.

குரல் வைத்துக் கூப்பிட்டுப்
பத்து
விரல் மடிக்க முன்பாக
வளவுக்குள் ஊரே நிறைந்துவிடும்.
கொண்டாட்டம்
திருவிழா
பண்டிகை என்றால் எம்மூரில்

பூக்கள் கூட புன்னகைக்கத் தொடங்கும்.
தம்வீட்டுக் காரியம்போல்
பம்பரமாய்ச் சுற்றும் சொந்தங்கள்.

கனகம்மா ஆச்சி பேரனுக்குக்
"காய்ச்சல்" என்றால்
பக்கத்து வீட்டுக்
கண்ணம்மாக்கா கூட
கண் தூங்க மாட்டாள்.

இப்படித்தான் ஒருகாலம்
இருந்தது எம்மூர்

அடுத்த ஊர்க்காரன் வந்து
எம்மூரில் யாருக்கும்
அடித்துவிட்டுப் போனால்
அடித்தவன் வீடேறிச் சென்று
மல்யுத்தம் போட்டவர் நாங்கள்.

இன்று
சொந்த ஊர்க்காரனே
சக சோதரி கற்பைப்
பந்தி போட்டுப் பரிமாறப்
பார்த்துக் கிடக்கிறோம்.

அசிங்கம் எம் எம்
முகங்களில் வழிய
சுவிங்கம் சப்பித் திரிகிறோம்
சொரணையற்றவர்போல்.

ஊரில் ஒருவர் இறந்தால்
பாடை காவ
நீ - நான் என்று
அடிபட்ட ஒருகாலமிருந்தது.

காவ ஆளின்றி
இன்று
சாமி கூட
சக்கர நாற்காலியில் ஊர்வலம்.

இத்தனைக்கும் பிறகும்
எங்கு போய்த்தான்
நாம்
இருந்தென்ன...?
இறந்தென்ன...?

# ஞாபகம்

பாடை ஊர்வலம்
பார்க்கப் பயந்து
ஆடை கழர
அலமலக்காய் ஓடியது
ஞாபகம்.

கணக்குப் பிழைத்ததால்
வாமன் ஆசானிடம் அடி
சுணைக்க வாங்கியது
சுத்தமாய் ஞாபகம்.

பெருங்குளம் தாயின்
தேர்முட்டிப் படிகளில் தடக்கி
உருண்டுருண்டு
விழுந்ததும் ஞாபகம்.

திலகக்கா வீட்டு
மாங்காய்க்கு கல்லெறிந்து
கலகம் செய்ததும் ஞாபகம்.
கிட்டிப்புல்லு
அடித்தது ஞாபகம்
கிளித்தட்டு
மறித்ததும் ஞாபகம்.

சின்னவயதினில்
என்னென்ன செய்தேனோ
எல்லாம் ஞாபகம்.

இன்று
நேற்றுக் கண்டவரைக் கூட
ஞாபகத்தில் இல்லை.

நினைவுத் திரைகளில்
வெறுமைபடர்கின்றன
எதுவுமற்று...

மீட்டுப் பார்க்க
மூளை நரம்புகள்
அதிர்கின்றன.

பழைய நினைவுகள் மட்டும்
பூக்களாய் விரிகின்றன.
ஏன் பசுமையானவை
என்பதாலா?
இன்றைய நினைவுகள்
அந்தளவிற்கு
கொடுமையானவையா?
குரூரமானவையா?

# ஏழை வடிவில் இறைவன்

கந்தலுடன் நிற்கும்
ஏழைகள் வயிறு
பற்றி எரிகிறது
கந்த சுவாமி கோயில்
கற்பூரம் போல

அக்கினிக்கு
யார் யாரோவெல்லாம்
வந்து
தாரை வார்க்கிறார்கள்
அப்பனே முருகா என்றபடி

யார் கண்களுக்கும்
தோன்றவில்லைப் போலும்
பக்கத்தில்
கந்தலுடன் நிற்பது
கந்தன் என்பது?

# மொழிமோகம்

உன்னை நீ
மொழிவதற்கு
உன் மொழி போதும்!

பின்னெதற்கு
"மம்மி"
என்கிறாய் தாயை?
"ஜிம்மி"
என்கிறாய் நாயை?

அரைக்க வேண்டும்
அம்மியில் வைத்து
உந்தன் வாயை!

கலப்படம்
உணவில்
உடையில்
மொழியிலுமா?

# சீதனச் சந்தை 1

தானாய்ப் பழுத்த
மாம்பழம் போல்
அவள்
கன்னங்கள்.

தேனாய்ச் சொரியும்
பூவிதழ்கள் போலவே
அவள்
செவ்விதழ்கள்.

உதட்டுச் சாயம்
பூசாமலே
கிளிச்சொண்டு போல்
அவள் சொண்டு.

பனையோலைப்
பாய் போலத்தான்
அவள்
படர்ந்த கூந்தல்.

உலகின்
மொத்த அழகும்
அவளில்
கொட்டிக் கிடக்குது.

அவளை
அடைய வேண்டி
ஆடவர் தவம் செய்ய
இந்த ஜென்மம் போதாது.

இந்த லட்சணக் குயிலை
மடியிருத்திப்...
பாடக் கேட்பதற்கு
கூலியும் அந்தக்
குயிலிடமா கேட்பது?

# சீதனச் சந்தை 2

பத்துச் சதம்
உழைக்காத மாப்பிள்ளைக்குக் கூட

பத்துப் பவுண் நகை
பத்து லட்சம் காசு
வீடு வளவு
ஏதேதோவெல்லாம்
இன்னும் இன்னும்...

கேட்டால் சொல்கிறார்கள்
குமர் காரியமாம்.

வெள்ளடியன் சேவல்போல
சீதனச் சந்தையில்
மாப்பிள்ளைக்கும்
நல்ல கிராக்கி.

வேடிக்கை என்னவென்றால்...
கேட்பதும் பெண்
கொடுப்பதும் பெண்
இடையிற் சிக்கித்
தவிப்பதும் பெண்.

மடிநிறையச்
சொர்க்கத்தையே
காவி வருபவளிடம்
கை நிறைய
எதை எதிர்பார்க்கின்றாய்
ஆடவா?

ஏய் பெண்ணே...
உரைப்பை நிறைய நிறைய
ரொக்கமாய்க் கொடுத்துக் கொடுத்து
ஒரு மாப்பிள்ளை எடுக்கலாம்.

நல்ல ஆண்பிள்ளையை அடைய
உன்
மனதை மட்டும்
கொடுத்தாற் போதும்
செய்வாயா?

# அகால கால நினைவும் ஆற்ற முடியா வலியும்

எட்டு நாட் கடந்தும் பிணம்
பெட்டியோடு கரைந்துறைய
கண்டம் கடந்து
பெற்ற பிள்ளைகள் வரவு பார்த்து
சவம்; தவம் கிடக்கும்

குடல் எடுத்த ஆத்மா
நிறம் கெட்டு உருவற்று நாறக்
கடல் தாண்டி வருவர்
மக்கள் மருகர் பறந்து.
கண்ணீர்ப் பூக் கொண்டும்
காசுப் பொதி கொண்டும்.

இதுவெல்லாம் வெறும்
வேடிக்கை என்கிறது
உச்சத்தில் இருக்கும்
உள்வீட்டுப் பல்லி
செத்த பிறகே என்
முகத்தில் "முழி" என்று
நீத்த ஜீவன் சொல்லிச்சோ
என்னவோ.... அச்சச்சோ....

உயிரிருக்க வந்து பார்த்து
உச்சி முகர்ந்து
அன்னமிட்டு
"அம்மா" என்றழைக்கும்
ஒற்றைச் சொல்லுக்கு
ஈடாகுமோ உலகிலேதும்?

பனிவிழும் நாட்டுப் பணத்தை
பாண்டிற்கும், பாடைக்கும்
கணிசமாய்க் கரைத்து விட்டுக்
காலியாகி விடுவர்
கடவுச் சீட்டுக்காரர்

அயல் சுற்றம் பிள்ளைகள்
அகன்று போக
"அந்த அனாதை" யின்
காலைச் சுற்றித் திரிந்த
நாய் மட்டும் படுத்திருக்கும்
அவள் வீட்டு வாசல் படியில்
ஓ....
நன்றி கெட்டது நாயல்ல
நாயே அல்ல
............

# லண்டன் சின்னவனும் சின்ன மருமகளும்

மூத்தவன் பிரான்சில்
அடுத்தவன் கனடா
சின்னவன் லண்டனில்
ரிங்.... ரிங்...... ரிங்......
ஹலோ
அம்மா நான்
சின்னவன் கதைக்கிறேன்

ஓம்.... ஓம்.... சொல் ராசன்
நல்ல நேரத்தில் எடுத்தாய்
நாங்களெல்லாம் இப்போ
சின்ன மருமகள் பார்க்கிறதில்
மூழ்கிப் போய் இருக்கிறம்

அப்படியா அம்மா!
ஓம் தம்பி
உண்மையாவா சொல்லுறியள்?
சத்தியமாய்ச் சொல்லுறன்டா....
சரி..... சரி......

எதற்கு உங்களின்
ஆசையைக் கெடுப்பான்
நானே நினைக்கவில்லை
நீங்கள் நினைத்து விட்டீர்கள்
அச்சா அம்மா.

பெண்டாட்டி வரும் கனவில்
பிள்ளை லண்டனில்
குட்டிப் புளுகில் நித்திரையிழந்து
குப்பறக்கிடந்து புரள்கிறான்

பாவம் பொடியன்
உடம்பைக் கயிறாய்த் திரித்து
உழைத்து உழைத்து அனுப்ப
அட படுபாவிப் பெற்றோர்;
பார்க்கினமாம் சின்ன மருமகள்;
நிஜத்திலல்ல சின்னத்திரையில்

போதை
புகையும் மதுவுமா....
மெகாவும் தான்;
யாராவது சொல்லுங்களேன்
மெகாவை விடவா
குடி குடியைக் கெடுக்கும்?

## ஈச்சாப்பி

கோடி சொத்துடன்
சொந்த மாளிகையில்
குடியிருக்கின்றான்.
அற்ப ஏழைக்கு
ஐந்து ரூபாய் தர்மம் போட
பிடிக்காத ஈச்சாப்பி
ஓ.....
பணம்
பெருகப் பெருக
மனம் ஏனோ
சிறுத்துப் போகிறது
கனம் தாங்காமலா?

# ஏழுச் செவ்வாய்

மனிதனை
வாழ வைப்பதற்கு
செவ்வாய்க் கிரகமே
தயாராகி விட்டது.

அட ......
பாவப்பட்ட
செவ்வாய்ப் பெண்ணை
வாழ்விப்பதற்கு
அவள்

சாதகம் கூட
இங்கே
சாதகமாய் இல்லை!

# பண்டமாற்று

அம்மா
ஆச்சி தாயே.
என்....
பிள்ளைக்கு ஏற்ற
நல்ல
வரன் கொடு.
வரம் கொடு.

அள்ளு காசும்
பொட்டுத் தாலியும்
கொண்டு தாறேன்!
ஓ....
கடவுளிடத்திலுமா
பண்டமாற்று!

# குரு பக்தி

ஒரு காலத்தில்
கடவுளை விடவும்
குருவுக்கே ராஜ மரியாதை.

ஆண்டவனைத் தன்
கையெடுத்துக்...
கும்பிட்டதை விடவும்
ஆசானைக்
கும்பிட்டவனே
அந்நாட்களில் அதிகம்

வீதியில் எங்காவது
வாத்தியாரைக் கண்டால்
மிதிவண்டி விட்டிறங்கி
மௌனித்து நிற்பார்கள்
மாணவர்கள்.

கல்வி ஒழுக்கம்
அன்று
கலங்கரை விளக்கமாய்த்
திகழ்ந்த காலமுமிருந்ததுதான்.

இன்று ஆசானைக்
கடை தெருவில் கண்டாலும்
ஹாய் சேர்;
என்று விட்டுச் செல்கிறான்
கற்கும் மாணவன்.

நல்ல நாள்
பெரு நாளென்றால்
தேனீர் விருந்துக்குத்தான்
ஆசான்களை அழைப்பார்கள்
விஸ்கி விரன்டி
விருந்துக்கு அழைக்கிறார்கள்
இன்றைய மாணவர்கள்.

அன்று பிரம்புக்கு இருந்த
மரியாதை கூட
இன்று
ஆசிரியர்கட்கு இல்லை.
இது தானா
குருபக்தி???

# சொந்தச் செலவில் சூனியம்

நவீனம்
நளினமாக்கிறது
வாழ்வை
வளத்தை

எல்லை கடந்த
விஞ்ஞானம்
எள்ளாய்க் குறுகும்
உலகம்.

நல்லதைச் செய்யும்
இணையம்
பலரின் வாழ்வைப்
பணயம் வைக்கிறது.

அறிவுப் பசிக்கு
இரை தேடாமல்
இளமைப் பசிக்கு
என்ன கிடைக்குமென்று
இணையத்தையே
துளாவி ஆராயும் தவ்வல்கள்.

பழசுக்கும் இப்போ
போனிலே காதல்
இளசுகள் எல்லாம்
நெற்றிலே ஊடல்.

முகப்புப் புத்தகம்
வந்த கையோடு
படிப்புப் புத்தகம்
கிடப்பில் கிடக்கிறது
பரீட்சைக்காக மட்டும்
பக்கம் தட்டப்படும்
பாடப் புத்தகம்

கைவீசி
நடப்பதை விடவும்
பலரிங்கே
கைபேசியில்
கதைப்பது தான் அதிகம்.

யாரோ....
அயர்லாந்தில் இருப்பவருடன்
அரட்டை அடிக்கிறாய்
அயல் வீட்டாரின்
ஊர் பேர் தெரியாத நீ

நாளை நீ
ஐயோ அம்மா என்றால்

முகப் புத்தக நண்பர்
முன்னுக்கு வரார்.
தேடற்கரியதைத்
தேடாமல்
எதையெதையோ எல்லாம்
தேடுகிறாய்.

நேரில் வந்து
எம்மைத் தேட
ஒருவரின்றிப் போக
வேற்றுக்கிரக வாசிகள் போல்
வாழ்கின்றோம்
சுற்றம் சூழலை மறந்து

ஐயகோ....
நமக்கு நாமே
சொந்தக் காசில்
சூனியம் செய்கின்றோம்.

இந்த வினை
அறுவதெந் நாளோ?

# நோய்களின் அரசாங்கம்

தென்னைக்கு
அதர் எடுத்த
பொன்னர் உடலில்
நெய் வடிந்தது நாளும்

துலா மிதித்து நீர்
இறைக்க இறைக்க
விலா எலும்பு வலுத்தது

மிதிவண்டி ஓடிய
அந் நாட்களில்
குதி தொடக்கம்
குரல்வளை வரை
வேர்த்துக் கொட்டியது

நடந்தார்க்கு நட்டமில்லை
என்னுமாற் போல்
நடந்தவர்கள் எல்லாம்
நோய்களைக்
கடந்து வாழ்ந்தார்கள்
அன்று...
கொழுப்புக்
கரைந்ததேயன்றி
படிந்ததில்லை யார்க்கும்.
இன்று
பொத்தானை அமுக்கிவிட்டு
பனை போல்
நின்ற படி ஒரு குளியல்

மலம் கழிக்கக் கூட
நாரியை வளைக்காமல்
சலமும் அடித்து விட்டுக்
கிளம்பும் சாதுரியம்

மா அரைக்க
தூள் அரைக்க
ஏன்....
வாய் அசைக்காமல்
உண்பதற்கு கூட
இயந்திரம் வந்தாலும் வரும்
எங்கும்...
எதிலும்.....
சொகுசு வாழ்க்கை

சொகுசான இடம் கண்டால்
நோய்களும்
நிரந்தரக் குடியுரிமை
கேட்காமலா விடும்?

சொகுசு சொகுசு சொகுசு
இங்கே தானே
நோய்களின் அரசாங்கம்

யாரென்றாலும் சரி
சுத்தமாய் இருந்தால் போதாது
சும்மா இருக்கவும் கூடாது

# ஓர் அகதியின் வாக்கு மூலம்

எல்லாம் வழமைக்குத் திரும்பின.
இன்னமும் எதற்காக
நாம் மட்டும் முட்கம்பி வேலிகளுக்குள்?
எல்லோரும் கைவிட்டுப் போக
இன்னமும் எம்மைக் கைவிடாத
காலாவதியான ஐ.நா.வின்
கூரைச் சேலைகளுக்குள்
அர்த்தமற்று
எம் அன்றாட ஜீவிதம்.

வதையுண்ட இப்பூமியை
வசீகரிக்க
வர்ணம் பூசப்படுகின்றன
காயப்பட்ட சுவர்களுக்கு மேல்

மனக் காயங்கள் மட்டும்
இன்னமும் அப்படியே ஆறாமல்

அகலாமல்....
அழுது வடிகின்றன
அகதி முக(ா)ம்கள்.

ஆதரிக்க
யாருமற்ற ஜீவன்களா இவை.

ஐயோ!
அகதி அந்தஸ்து தாவென்று
எவராவது அடம் பிடித்தோமா?
இல்லையே
ஏன் இந்தத் தாமதம்
எதற்காக இழுபறி.

வேற்றுக் கிரகத்திலா
குடியமர்த்தக் கேட்டோம்
அவர்கள் யோசிப்பதற்கு?

# உயிர் வலித்த கணங்கள்

இந்த மண்ணில்
முளைத்த
ஒற்றை யொரு
காரணத்திற்காய்...

பச்சை மரங்களும்
காயப்பட்டன.
எரியூட்டப்பட்டன.
தலைசீவப்பட்டன.

நாம் மட்டும் என்ன
ஆபிரிக்காவிலா
பிறந்தோம்
தப்பிப் பிழைப்பதற்கு?

பூமிப் பந்தில்
எங்கும் நிகழ்ந்திராப்
பேரவலத்திற்குள் நின்று
மூச்சுத் திணறித்தான்
சாமி சத்தியமாய்
மீண்டு வந்தோம்!

உயிர் வேர் பதைக்கப் பதைக்க
மயிரிழையில் மீண்ட கணங்கள்
மறக்குமா எம் மனங்கள்.
'உயிர்' இருக்க முடியாமல்
உடல் விட்டுப் பாய
எத்தனித்த தருணங்கள்
எத்தனை மரணங்கள்.

அத்தனைக்குள்ளும்
எம்மை நாமே
ஆசுவாசப் படுத்தி
வீசும் கணைகளுக்குள்
விழுந் தொழும்பி மீண்ட
பொழுதுகளை எல்லாம்
இன்றும் நினைத்தாலும் பதைக்கும்.

உருக்குலைந்து கிடந்த
உயிரற்ற உடல்களுக்கு மத்தியில்
பெருக்கெடுத்தோடிய
ஈர இரத்த அலைகளுக்கு நடுவில்
கருக்கலைந்து கொண்டிருந்த
ஈழத்தாயின் கருவறை விட்டுக்
கடைசி மனிதர்களாய்த்

தெருக்களில் தூக்கி
எறியப்பட்டோமே...
நோப்பட்ட உடலுக்கே
நோத் தெரியும்.
எருக்குவியல்களாய்க் கிடந்த
பிணக்குவியல்களுக்குள்
யார் யாரென்று யாரை
யார் தேட முடியும்.

அப்பாவி உயிர்கள்
கொலையுண்ட பூமியின்
ஒப்பாரி
காற்று... நிலவு... வான்...
உள்ளவரை ஓயாது.

இறந்தவர்களின்
ஆத்மாக்களைச் சாந்திப்படுத்த
அவர்கள் கேட்டதில்
எதைக் கொடுப்பாய்
மனமுவந்து...?

# காணாமற் போன (அ)வர்கள்!

தேடித் தேடியே
களைத்துப் போய்விட்டோம்.

உம்மைத்
தேடாத இடமில்லை
ஏறாத படியில்லை.
வரும்போது வழியில்
அந்தக் குரூர இருளில்
ரணங்கள் நிறைந்த தருணங்களில்
கண்கள் சாட்சியாக...
கடவுள் சாட்சியாக...
பிரியா வரம் பெற்ற நாம்
பிரிந்து வந்தோம்
வேறு வழியின்றி.

அன்றிலிருந்து இன்றுவரை
காணோம் ஓரிடத்திலும்?
ஒன்றும் புரியமறுக்கிறது.
வெற்றுக் குரல்களால்
விண்ணதிர முழங்கியும்
ஒற்றைத் துணுக்கும்
கசிந்த பாடாயில்லை.

காணாமற் போனவர்கள்
பெயர்ப் பட்டியலில்
இன்னமும் வாழ்கின்றீர்கள்.
எம்மோடு கூடவே
சேர்ந்து வாழக்
கொடுத்து வைக்காத நீங்கள்!

எம் உதிர உறவுகளே...
நீங்களாவது சொல்லுங்கள்.
எந்த ஜென்மத்திலும்
உம்மைக் காண முடியாதா?

காணாமற் போகச் செய்தவர்களே.
நாம் கேட்பது ஒன்றேயொன்று!
எம் உறவுகள்
உண்டா...? இல்லையா...?

ஆத்மா சாந்திக்கு
ஓர் அர்ச்சனை செய்ய...
கீரிமலை சென்று
பிதிர்க் கடன் கழிக்க...
எம் உறவுகள்
உண்டா... இல்லையா..?
யாராவது சொல்லுங்களேன்?

# இதுவா ஜெனிவா?

கண்ணீரால்
நா நனைத்து...
செந்நீரால்
தலை கழுவி
அணு குண்டு போல்
எம் இதயங்கள்
வெடித்துச் சிதறிய தருணங்களில்
கும்பகர்ணர் போலவே
குறட்டை விட்டவர்கள்.

உயிரிருக்கக் கெஞ்சி
மன்றாடி
வேண்டிய போதெல்லாம்
ஏறெடுத்தும் பார்க்காத
ஐ-நாவும்
எந்(த) நாவும் இப்போ
வாயடிச்சு என்ன பயன்?

நாறடிக்கச் செய்த நலவான்களே
செய்த பாவத்தைக் கழுவ
இந்த பசுபிக் சமுத்திம் போதாது.
எம்மை வைத்து
ஏலம் கூவிக் கூவி
பிழைத்துக் கொள்கிறதிவ்
உலகம்.

இங்கே
நாம் எங்கள் ஒருவேளை
வயிற்றுப் பிழைப்புக்கே
வழியற்றுத் தவித்திருக்க
அங்கே இன்றும்
நல்ல விலைபோகிறது
எம் கண்ணீர்!
இதுவா ஜெனிவா?

# கருத்தடை மாத்திரை உனக்கும் தான்

ஓ.....
ஈ போல் இருந்து கொண்டு
நீயோ
ஈட்டி போல் குத்துகிறாய்

ஏ....
நோய் காவியே
உனக்கு
இரக்கமென்பது
இல்லாததாலா
இதயத்தை எடுத்தான் இறைவன்?

எம்
சுகமான தூக்கத்தை
குழப்புவதில்
உனக்கு மட்டும்
அப்படியென்ன சுகமிருக்கிறது.

கொடிய கொசுவே
முதலில் தரப்பட வேண்டும்
உனக்குத் தான்
கருத்தடை மாத்திரை.

ஐந்தாறு பேரை
அடித்து விழுத்தவல்ல
சண்டியர் கூட
ஈற்றில் தோற்றுப் போவது
உன்னிடம் மட்டும் தான்

ஒளிந்திருந்து
குருதி குடித்து
சத்தமில்லாமல்
உயிர் தின்னும்
கொடிய நோய் காவி
நீ... நீ...
அற்றுப் போ
நாம் வாழ்வதற்கு!

# பாவக் கிரகம்

அம்ச அழகு
அவள்
அத்தனை அழகு

ரம்மிய விழிகள்
அவள் கன்னங்களில்
அதிஷ்டச் சுழிகள்.

பாம்பாய் நெளியும்.
அவள் கூந்தல்.
அள்ளி முடிந்தால்
பிடரியைச் சுற்றும்
தேடா வளையம்.

சின்ன இடை.
சித்திர நடை
என்ன
விலை கொடுத்தும்
வாங்க முடியாத
பெண்ணம் பெரிய
மனசு.

பிரம்ம தேவனின்
பிரத்தியேகப் படையல்.
ஒப்பனைகள்
தேவையில்லை
அவளை
ஒப்புவிக்க
வார்த்தைகளில்லை.

ஓ....
எல்லாம் இருந்தும்
வாழ்க்கை இன்னும்
சித்திக்கவில்லை.

பாவம்!
பாவக் கிரகம்
பெண்ணுக்கு
சற்று அதிகமாம்.

சோதிட விற்பனர்களின்
புதிய கண்டுபிடிப்பு
கிரகங்கள்
வானத்தில் என்பார்கள்
இப்போ
வாழ்க்கையிலுமா?

# கவலை

எல்லாவற்றையும்
இழந்து வந்தோம்
என்பதைப் பற்றியல்ல

இன்னமும்
இழக்காமல் இருக்கின்ற
இந்த உயிரைப் பற்றித்தான்
இப்போ கவலை

# மாறாத நிலவும் வானும் மாறிப் போன நானும்

நேற்று நிலாச் சோறுண்டு
காற்றில் சிறகு பூட்டிப் பறந்தோம்
கனவு மனிதராய் நாமும்

ஊதிப் பெருத்த கற்பனை வானில்
ஓர் விண்ணோடம் போல்
சஞ்சரித்தோம் நாம்
அது ஒரு நிலாக் காலம்.
முற்றத்து மல்லிகை வாசம்
மூக்கிலடிக்க
சுற்று மதில்
கட்டுக் கிணறு
வீடு வாசல் சொத்து சுகம்
சொந்த பந்தம்
எம் மனங்களைப் போலவே
எல்லாமும் எம்மிடம்
நிறைந்திருந்தன.
பஞ்சம் என்ற நான்கெழுத்தைப்
படைத்த பிரமன்
யார் யாருக்கெல்லாம்
தலையெழுத்தாய் பொறித்தானோ?

காற்றுதைத்துப் பறக்கும்
விட்டில் பூச்சிகளுக்கு
கை விளக்கில் விழுந்தாற் தான்
"சா" என்றால் விதியை மாற்றவா முடியும்?
முன்பெல்லாம் பிச்சை கேட்டு
வந்தவனுக்கு
பச்சரிசிச் சோறும்
பட்டுப் புடைவையும்
கொடுத்தனுப்பினோம்.
எம் தெய்வமே

அதே பிச்சைக்காரன் எம் வாசலில்
நாம் மறந்தாலும் அவன் மறக்காமல்
நன்றியுடன் நீட்டுகிறான் கையை
ஐயா... .அம்மா.... என்றபடி
ஐயா என்கிறான் அவன்
ஐயோ என்கிறேன் நான்
யார் விதியை யார் நோவது?

பிச்சைப் பாத்திரம்
அவன் கண்ணீரால் நிறைந்து விட்டது
அத் தருணத்தில்
கொடுப்பதற்கு என்னிடம்
கைவசம் இருந்தது
என் கண்ணீர் மட்டும் தான்

# ஆசை

ஓடம் போல் நீந்தும்
உன்....
விழிப்படகில் உட்கார்ந்து
காலமெல்லாம்
பயணிக்க ஆசை.

கோதிவிட்ட
உன் கூந்தலிற்குள்
கூடாரம் அமைத்துக்
குடியிருக்க ஆசை.

கூவித் தொலைக்கும்
செல்போன்களைச்
சாவிப் பெட்டிக்குள்
பூட்டி வைத்துவிட்டு
ராவு பகலாய் உன்னோடு
ரகளை செய்ய ஆசை.

ஆசையாய் உன்னை
அசைபோட ஆசை.
உன்னில் என்னை
எடைபோட ஆசை.

அதற்கும் ஆசை
அடங்காது போனால்
அதையே திரும்பத் திரும்பத்
தொடங்க ஆசை.

கடைசியாய்
ஓர் ஆசை.

ஐந்து செக்கன் என்றாலும்
உனக்கு முன்
உந்தன் மடியிலேயே
இந்த உலகைப்
பிரிந்து விட ஆசை

என்னன்பே
சித்திக்குமா என் ஆசை?

# மனைவி

இமைகள் கூட
சுமையாய் இருந்தது.
நீ வரும் முன்பு

எந்தச்
சுமைகளும்
இப்போ
சுகமாய் இருக்கிறது
நீ வந்த பின்பு

# ஆயுள்

ஒரு நாளைக்கு
ஒரு தடவையாவது
முத்தமிட்டால்....
என்னன்பே.....

என் ஆயுள்
இரட்டிப்பாகும்
செய்வாயா?

# நித்திரை மாத்திரை

பனையோலை போல்
உன்
படர்ந்த கூந்தலிற்குள்
முகம் புதைக்காமல்
எனக்கு
இப்போதெல்லாம்
நித்திரை
சாத்தியமாவதில்லை
ஏனோ....
என்னவோ
அப்படித்தான்

என்னன்பே
உன் கூந்தல்
எனக்கென்ன
நித்திரை மாத்திரையா?

# சேராத காதல்

சந்திப்போமா
நாம்
இருவரும் என்கிறாயே
தண்டவாளத்தின் மேல்
நின்ற படி

ஏய் பெண்ணே
சேராத காதல்
இது தானா?

# இரவு வேண்டும்

அரக்கப் பரக்கப்
பறக்கும்
அவசர யுகத்தில்

அந்த
இரவுகளும் இல்லையென்றால்
என்னன்பே
நீயும் நானும்
அதோ கெதி தான்

சேர்வதெங்கே?
ஒன்றாய்
ஆவதெங்கே?

அம்சமுமின்றி
நம்
வம்சமுமின்றி
தோற்றுப் போயிருப்போம்
வாழ்க்கைத் தேர்வில்

ஓ
அதற்காக வேணும்
இரவு வேண்டும்
எல்லோருக்கும்.

# உனக்கு பிறகே எல்லாம்

என்னருகில் நீயிருக்கும்
எப்பொழுதும்
இந்த உலகம்
என் உள்ளங் கையில் சுற்றியது

சற்றுத் தூர
நீ விலகி நிற்கும்
ஒற்றை வினாடியும்
இந்த உலகைப் பார்க்க
எனக்குத் தலையே சுற்றுகிறது.

உன் பார்வை
என்னில் படாத
பத்து செக்கன் என்றாலும்
அதற்குள் நான்
செத்துத் தான் பிறப்பேன்

என் ஜீவன் நீ
என்னை இயக்கும்
மகா சக்தி நீ

உயிர் வாழ
ஒட்சிசன் தேவையோ
என்னவோ
அவசியம்
நான் வாழ நீ.

என்னுயிரே
உனக்குப் பிறகே
எல்லாப் புகழும் எனக்கு!

# சொர்க்கம்

தலையணை
மெத்தை தான்
வேண்டுமென்றில்லையே?

சுகமான தூக்கத்திற்கு
அமைந்தால் போதும்
நல்ல மனைவி

இரவும்
சொர்க்கம் தான்!

# கிட்டாத வரம்

என்னன்பே
உன் கூந்தலிற் குடியிருப்பதற்கு
ஒரு
பூவாகத் தானும்
படைக்காத கடவுள்

என்னை
வெறும்
புல்லாகத் தானும்
படைத்திருந்தால்
உன் பாதம் பட்டு
மறு ஜென்மம்
எடுத்திருப்பேன்.

என் செய்வேன்
இனி....
உன்னை அடைவதற்கு?

# கண்ணில்லாத காதல்

ஒற்றைத் தரம் கூட
நேரில் வந்து
உன் காதலைச்
சொல்லாத நீ

நான்
கண்கள் மூடியதும்
என் விழியோரம்
வந்து நிற்கின்றாயே
அடி பெண்ணே

காதலுக்கு
கண்ணில்லை
என்பதாலா
நீ
என் கண்களை
மூடச் சொல்கிறாய்
உன் காதலைச்
சொல்வதற்கு!

# முதிர்கன்னி

இன்று
பூக்களுக்குக்
கூட...
கண்ணடிக்கத்
தெரிகிறது.

சில
பெண்களுக்கு
அதுவும் தெரியாது.
ஒன்றும் தெரியாது.

கண்ணடிக்கும்
பூக்களெல்லாம்
மனங்களைக்
கொள்ளையடித்து
வாழ்கின்றன.

மற்றவைகள்
மற்றோருக்குப்
பாரமாய்....
பாவமாய்....

ஏன்
சில பெண்களும்
அப்படித் தான்?

# அழகின் ரகசியம்

பூக்களைப் பறித்து
சூடிக் கொள்கிறாய்
உந்தன்
ஈரக் கூந்தலில்

பூக்களுக்கே
அப்போது தான்
புரிந்தது
தம் அழகின் ரகசியம்

# காதல் மழை

அவ்வப்போது
மழையில்
நனைவதுண்டு

என்னன்பே...
என்னை
நான்
நித்தமும் நனைப்பது
உன்
காதல் மழையில்தான்!

# சீ.... சீ.... சிகரெட்

ஆசையாய் ஈர்க்கப்படுகிறாய்
அது.....
'மோசம்' என்று தெரிந்தும் நீ

வாயில் தொடங்கி
நோயில் தள்ளி
அது உன்னை
பாயில் விழுத்தும் சடுதியாய்

நீ
புகைக்கும் ஒவ்வொரு கணமும்
உன் ஈரலும் புகைக்கிறது
உள்ளே சுவாசக் குழாய்
வீணே துருப்பிடிக்கிறது.

உலகில் மனிதருக்கு
எத்தனையோ பகை

புகைக்கும் உனக்கோ
புகை தான் முதற்பகை

நீ
சிகரட்டை இழுக்க இழுக்க
அது உன்னை இழுத்துச் செல்கிறது
சாவின் விளிம்புக்கு!
வெற்றுப் புகையை
வெளியே தள்ளி
புற்றுநோயை உள்ளிழுக்கிறாய்
மொத்தத்தில் புகைப்பதால்
உன் பக்கத்தில் இருப்பவனும்
பலியாகின்றான்.

ஒன்றுணர்க
பகை - பகைத்தால் தான் பகை
புகை - புகைத்தாலே பகை
பகை - இருந்து கொல்லும்
புகை - விரைந்து கொல்லும்
நீ சொல்வாயா இனி
சீ....சீ.....
வேண்டாம் 'சிகரட்' என்று

# நமக்கு நாம்

காசு பணம்
வரும்
போகும்.

பேர் புகழ்
கூடும்
குறையும்.

அன்பர்
நண்பர்
வருவர்
போவர்.

ஒன்றும்
நிதர்சனமாய்
நிரந்தரமாய்
இல்லை.

எல்லாமும்
எதுவும்
அப்படியும்
இப்படியும் தான்.

எப்போதும்
கூட வருவது
என் நிழல் மட்டும் தான்.

ஓ...
இப்போது புரிகிறது
நமக்கு
நாமே துணை
என்பதன் அர்த்தம்.

# தை

தை பிறந்தால்
வழி பிறக்கும்
என்பார்கள்.

மனதளவில் கூட
மாற்றம் நிகழவில்லை
பின்
தை
வந்தென்ன....
போயென்ன....

ஒவ்வொரு தையும்
பிறந்து பிறந்து
உன்னை
முதுமையாக்குகிறதே.

அதை விளங்காமல்
தையை நம்புகிறாய்
தைரியம் பிறக்குமென்றா?

# கவிதைத் தோட்டம்

என்
கவிதைத் தோட்டத்துப்
பூக்களை
ஒவ்வொன்றாய்ப்
பார்க்கிறேன்.

உணர்வின் ஈரத்தில்
ஒன்றும் வாடாமல்
இன்னமும் வாசமாய்

மரத்துப் பூக்களை
தலையிற்தான் சூடலாம்
என் மனப் பூக்களை
உங்கள் உங்கள்
மனங்களில் சூடி மகிழலாம்

வாருங்கள்
நீங்களும்
என் கவிதைத்
தோட்டத்துக்கு!

# விதிரோந்து!

நாய்களுக்குக்
கூட
இப்ப நல்ல காலம்!
இல்லையென்றால்
...............................
வாய்க்கு வந்தபடி
கத்திக் கத்தியே
இன்னமும்
எத்தனை இரவுகளைத்
தொலைத்திருக்கும்.
நல்ல காலம்!

## எழுகை

உயர்வு தாழ்வு
போல.....
எழுச்சி வீழ்ச்சி
போல.....

ஏற்றம் இறக்கம்
போல
வாழ்வில்
எழுதலும் விழுதலும்
சகயம் தான்

ஒருவன்
விழுந்ததைப் போல
தானாகவே
எழவும்
தெரிந்தால் தான்
வாழ்க்கை

எழுந்தவனுக்குக்
கொடி குடை
ஆலவட்டம் பிடிக்க
ஆயிரம் பேர்
கூட எழுவர்

யாரும்
விழுந்து விட்டால்
போதும்
விழுந்தவனைத்
தூக்கி விட
படைத்த கடவுளும்
திரும்பிப் பாரார்

ஆதலாற் தான்
விழுந்ததைப் போல
யாரென்றாலும் சரி
எழவும்
தெரிந்தால் தான்
வாழ்க்கை!

# முன்னேற

கூர்ப்
பற்களுக்கு மத்தியில்
சுழன்றபடி தான்
நாக்கு
தன்னைக் காக்கின்றது

முட்களுக்கு நடுவில்
இருந்தபடி தான்
ரோஜா
பூத்துப் புன்னகைக்கின்றது
நீ மட்டுமென்ன
விதிவிலக்கா....

பிரச்சனைகளுக்குள்
இருந்து தான்
ஜெயிக்க வேண்டும்
வாழ்வில் முன்னேற!

# நாமும் நாளை முதியோர் தான்

ஈன்ற குற்றத்திற்கு
இப்படியுமா தண்டனை?

"கல்" நெஞ்சரையா
கருவில் சுமந்து
பிள்ளைகளாய்ப் பெற்றீர்கள்?

அக்கிரமங்களைப் பெற்று
அமுதூட்டி வளர்த்து விட்டு
சீக்கிரமாய்ப் போகின்றீர்
வயோதிப மடங்களுக்கு

முள்ளைத் தின்று
மீன் ஊட்டி ஊட்டி
வளர்த்தோம் என்கிறீர்களே
அதற்கு இதுவா
செஞ்சோற்றுக் கடன்

காப்பகங்கள் கூட
மூச்சுத் திணறுகின்றன
நாதியற்றோரால்
இப்பவும்.....
மூப்பற்ற பெற்றோருக்கு
முன் பதிவுகள் மும்முரம்

பாருங்கள் போய்
சொகுசு இல்லங்களில்
தம் பிள்ளைகள் தாம்
நலமுடன்

இசுறு உதான வில் சேமிப்பு
தம் பிள்ளைகள் நலமுடன் வாழ

ஏய் பாவி மனுசா
பண வட்டி ஒரு குட்டி போட
பாவ வட்டி பல குட்டி போடும்
அறியாயா நீ.

மனைவியை அம்மா என்கிறாய்
அன்னமிட்டவளை
அனாதை இல்லத்தில்
தள்ளிவிட்ட
அயோக்கியத்தை மறந்து!

# கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்

பழசுகள் பலவும்
பலருக்கும் ஞாபகமில்லை
இளசுகளுக்கும்
ஒன்றும் தெரியாது.

குரக்கன் பிட்டும்
ஒடியற் கூழும்
சுவைத்துச் சாப்பிட்ட
சுகமுண்டோ
இன்று யார்க்கும்?

கிளுவம் வேலி
கிடுகுத் தட்டி
பனைமட்டைப் படலை
ஒன்றும் இன்று
புழக்கத்தில் இன்றி
அருகி விட்டன.
எங்கு பார்த்தாலும்
சீமெந்துச் சுவர்கள்.

ஒரு குமரை வாழ்விக்கப்
போதுமான பணச்செலவில்
முன் வாசற் படலை

போதாக்குறைக்கு
முற்றத்து மண்ணில்
விழுந்து தவழ்ந்து
முத்தமிட்ட காலம் மாறி
இன்று
சீமெந்து முற்றத்தில்
விழுந்து மூக்குடையும் அவலம்.
மண்ணழைந்தால் அல்லவா
பிள்ளைக்கும் மண்பற்று வரும்.
ஐ போனும், ஐ பாட்டும் தானே இன்று
விளையாட்டுச் சாமான்கள்.

கிளித்தட்டும்
கிட்டிப் புல்லும் அடித்து
விளையாடிய காலம்
வழக்கொழிந்து போச்சே?
பிள்ளையார் போணி
விளையாடும்
பிள்ளைகளைக் காணோம்
பத்துவயதுப்
பிள்ளையின் கையிலும்

அரைலட்சம் ரூபா
மதிப்புள்ள போன்
லட்சங்கள் மலிந்ததால்
உலகின்
உச்சங்கள் எல்லாம்
உள்ளங் கைக்குள்.

குடிசை வீடும்
கூப்பிட்டாக் குரலும்
இல்லையே இன்று.
குசலம் விசாரிப்புக் கூட
இன்று .com இல் தான்.
தபாற்காரன் போல
இனி...
சொந்தங்களும் நேரில் வரார்.

தனித்தனித் தீவுகளாய்ச்
சிதறிப் போன மனங்களை
இணைத்துள்ளதால்
அது இணையம்
அவ்வளவே
பழசுகளுக்கெல்லாம்
இனி குட் பாய்!
சொர்க்கம் + நரகம்
இரண்டும் சேர்ந்தது தானே
நெற்கொம்!

# தர்மம்

செத்தவன் வாய்க்கே
“வாய்க்கரிசி” போட்டு
வழியனுப்பும் சமூகம்
அட
பிச்சைக்காரன் நீட்டும்
கோப்பையில்
என்ன போடுகிறது
படலையில்
தொங்கப் போடுகிறது
நாய் கடிக்கும்
கவனமென்று!
ஓ....
கேட்பது தர்மம்!
நடப்பதோ அதர்மம்.

# நான்

நான்
நானாக இல்லை
என்னிலும்
நான் இல்லை

இருக்க வேண்டிய
நான் வேறு
இன்று
இருக்கும் நான்
எனக்கே பிடிக்காத நான்
நானே வெறுக்கும் நான்

மற்றவர்கள் போல்
வாழ, வளர,.... உயர....
எல்லாமும் இருந்தது
எனக்கும்
அதிஸ்டம் என்கின்ற
ஒன்றைத் தவிர

எல்லோரும்
எதையெதையோ
தொலைத்து விட்டுத்
தேடுகிறார்கள்.

நான்
வாழ்வையே
தொலைத்து விட்டுத்
தேடுகின்றேன்.
அஃது
எங்கு கிடைக்கும்.
எப்படிக் கிடைக்கும்.

அவள் வயதுச் சிறுவர் சிறுமியர்
அவளையும் கடந்து விரைய
ஆச்சரியக் குறியாய்ப் பார்க்கும்
பலருக்கும் மத்தியில்
கேள்விக் குறியாய் நிற்கிறாள்

அவளின் பனித்த விழிகளின்
கனத்த இதயத்தின்
உளப்பொருமலை யாரறிவர்?

பல முரண்களினாலானதிவ் வுலகும்
கருணையைக் கூடக்
கேட்டால் காசுக்கு விற்கும் கலியுகம்
இவளின் கண்ணீரையா பார்க்கும்.

அங்கோர் பணக்காரன் பணம்
ஐந்து நட்சத்திர விடுதியில்
தண்ணீராய்க் கரைகிறது
இங்கோ சிறுசுகள் 'எதிர்காலம்'
கண்ணீரில் கரைகிறது.

யாராவது சொல்லுங்களேன்?
இதுவா...
இறைவன் படைப்பின் பாரபட்சம்?

# அஞ்சலி

மாமலை ஒன்று மண்ணிலே வீழ்ந்து
        மாதமொன் றானது இன்று - பாசத்
தாமரை ஒன்று வாடிய திங்கு
        தாங்குமோ எங்களின் நெஞ்சு
பூமழை போன்று அன்பினைச் சொரிந்த
        புண்ணிய சீலனைக் காணோம் - எமன்
சாவலை வீசிச் சரித்ததால் தானோ
        சகலரும் சோகமென் றாணோம்

சந்திர வதனம் அன்பினிற் சிகரம்
        சாந்தமே ஆனதும் உருவம் - நற்
பண்பினில் இமயம் பார்த்திட உருகும்
        பனிமலை போலிவர் வடிவம்
கண்களில் கோபம் வாயினிற் சாபம்
        கருத்தினில் அறியாப் பாவி - மனச்
சஞ்சலம் இல்லாச் சந்தண மேனி
        சாய்ந்ததால் துடிக்குதெம் ஆவி

சொல்லினில் அமுதம் சொற்களில் கவனம்
        சொக்கிட வைக்கும் இதயம் - யாரும்
இல்லையென் றழுதால் இரங்கிடும் சுபாவம்
        இவருக்குள் வாழ்ந்தது மனிதம்
மெல்லெனத் தழுவி மேனியை வருடி
        மனசுக்குள் வீசிய காற்று - இங்கே
உள்ளவர்க் கெல்லாம் உவகையோ டுதவும்
        உள்ளமும் இல்லையென் றாச்சு!

# பகட்டு மொழி!

தலையணையில்
பொறிக்கிறாய்
Good Night
Good Luck என்று

தமிழா...
படுபாவி மனிசா...
தலை வைத்துப்படுக்கும்
தலையணையில் கூட
உரிய இடம்
கொடுக்காத உனக்கு
பிறகென்ன கரிசனை
தமிழில்...
தாய்மொழியில்...?

ஓ...
பகட்டுக்கு ஆங்கிலம்
பறைகிறாய்
நிகரற்ற தமிழின்
நீட்சி தெரியாமல்?

# முதல் தான் முதல்

தலை நிறைய
இருந்தும்
பலனில்லை.

இந்தக்
காலத்தில்
கை நிறைய
இருந்தாற் தான்
காற்றும் கூட
நம் பக்கம் வீசும்.

படிப்பு
பட்டம்
பதவி.....
எல்லாம் இப்போ
பின்னாடி தான்.

முதல் தான்
முதல்

காலம் இப்படியாயிற்று
கற்றவனிற்குப்
பின்னாலே
ஆட்களைக் காணோம்.

எல்லோரும்
காசுக்குப் பின்னாலே?

எப்படி முன்னேறும்
இந்த உலகம்?

# மானசீகக் குரு!

பேனா பிடித்து எழுத அமர
தானாய் வந்து போகுதுன் நினைவு.
தவிர்க்க முடியாது என்னால் உன்னை.
மறத்தல்... நினைத்தல்... என்று
எதுவுமற்று என்னுள்
"இருத்தல்" என்று இருப்பவன் நீ!

என் மனம், மெய், மொழி, வாக்கு
அனைத்திலும் நீதான்.
கடவுள் என்னைப் படைக்க
என் அன்னையைப் படைத்தான்.

நான் கவிதை படைக்க
உன்னைப் படைத்தான்
அவ்வளவுதான்.
நீ இட்ட அத்திபாரம்
என் படைப்பெல்லையை
விசாலமாக்கியது.

நீ தந்த அங்கீகாரம்
கலையுலகப் பரப்பில்
என்னை விலாசமாக்கியது.
விறாத்துக் குஞ்சாய் வந்த என்னை
விஸ்வரூபம் எடுக்க வைத்தவன் நீ.
மறக்கிலேன் உன்னை.

# வித்தியா

ஆண் வர்க்கமே
அசிங்கப்பட்ட நாள்.
வித்தியா நீ
கலங்கப்பட்ட நாள்.

ரத்தவாடை குமட்ட
வெள்ளைப் புறா
பற்றைக்குள் கிடந்தது.
எல்லாம் பறிகொடுத்து.

நானும் ஆண் என்றிட
'நா' கூசுகிறது
ஏன் இந்த வெறித்தனம்.

மனிதப் புலான்
உண்ணிகளால்
மனச்சாட்சியின்றி
மரிக்கப்பட்டாள் சோதரி.

பட்டப் பகலில்
பாதகம் நிகழ்ந்தேற
அட்ட திக்கும்
அதிர்ந்து போனது.

அதிர்ந்ததுதான்
மிச்சமா?

உதிர்ந்த பூவை
உதிர்த்தியது யார் யார்?
நீதி பெறுமா
நீத்த இவள் உயிர்.

கேள்விக் கணைகள்
எம் எம்...
நெஞ்சைத் தைக்கின்றன.
கேள்விக் குறியாய்
இன்னமும்
வித்தியா வழக்கு?
சத்தியம்
நிலைபெறாத வரை
வித்தியாக்கள் படலமும்
பட்டியலிற்தான்.

இது
காலத்தின் பிழையல்ல.
நம் நம் பிழை.
அயலவன் யார்.
அயோக்கியன் யார்.
அவலம் இதான பின்பு
ஆரைத்தான் நோவது?

# விஜய் படம்

விஜய் படத்திற்குப்
பாலை வார்க்கிறார்கள்.
அட
பாலை வார்த்தால் கூடப்
பரவாயில்லை.

விஸ்கி விறண்டியும்
அல்லவா தலையில் ஊற்றுகிறார்கள்
தறிகெட்டுப்போய்!

குப்பைகளைக் கிளறிக் கிளறி
பொறுக்கி எடுத்துக்
கோப்பையில் போட்டுண்ணும்
வெறும் முண்டங்கள்!

மூளையற்றவர் தாமென்று
தம்மைத் தாமே

முன்மொழிவர்
வேலையில்லா
வேலை பார்த்து!

பால் என்ன பெறும்.
படம் என்ன பெறும்.

ஒன்றும் விளங்காத
சடம் இவர்கள்!
இவர்கள் அல்ல
இதுகள்!

# ஈரவரிகள்

விழிகள் அழுவதால்
வெளியே ஈரம்.
உள்ளம் அழுவதால்
உள்ளேயும் ஈரம்.

அழுது அழுது
உயிரே நனைவதால்
எழுதும் என்
வரிகளிற்கூட
ஈரம் கசிகிறது.

புடவை நனைந்தால்
ஒரு வெயிலிற் காயும்
என் உயிரல்லவா நனைகிறது.
அஃது
எப்ப காயும்?
எப்படிக் காயும்?

## அகதி

*யார்*
*யாருக்கோ எல்லாம்*
*ஏதேதோ கவலை.*

*எம்மைப்பற்றி*
*யாருக்குக் கவலை?*
*யாருக்கெடா கவலை??*

# பொங்கல்

*பாடல்: கவிஞர் வேலணையூர் சுரேஷ்*
*பாடியவர்: மாலதி*
*இசை: மாணிக்க விநாயகம்*
*இறுவட்டு: கண்ணகை அம்பாள் இசைமாலை*

**பல்லவி**

பொங்கல் அம்மா பொங்கல்
பொங்கி வரும் பொங்கல்
எங்கள் அம்மன் கண்ணகிக்கு
நாமெடுக்கும் பொங்கல்

நெல்லரிசிப் பொங்கல்
நேர்த்தி வைத்த பொங்கல்
வில்வ மர நாயகிக்கு
விருந்து வைக்கும் பொங்கல்

**அனுபல்லவி**

தேனைப் போல நாவினிக்க
கரும்பைப் போல வாழ்வினிக்க
பானை வைத்து நாமெடுக்கும் பொங்கல் - எங்கள்
பத்தினியாம் கண்ணகிக்கு நாம் படைக்கும் பொங்கல்

**சரணங்கள்**

வைகாசி மாதம் வரும் வற்றாப்பளைப் பொங்கல் - எங்கள்
வண்ணாங்குளம் கண்ணகிக்கோ ஆனி திங்கள் பொங்கல்
கை ராசி ஆன தெய்வம் கண்ணகிக்குப் பொங்கல் - எம்மைக்
கண்ணாகக் காத்து நிற்கும் பத்தினிக்குப் பொங்கல்
ஊர்களெல்லாம் சுற்றி வந்து அருள் கொடுக்கும் பொங்கல் - கொடி
ஏற்றி வைத்து எட்டு நாள்கள் விழாவெடுக்கும் பொங்கல்.

அருள் மணக்கும் பொங்கல்
துயர் மறக்கும் பொங்கல்
எங்களம்மா ஊஞ்சலாடி
மனம் மகிழும் பொங்கல்

கோபுரத்து நாயகிக்குக் கோலமிட்ட பொங்கல் - எங்கள்
கோவலனின் தாரத்துக்குத் தேன் ஒழுகும் பொங்கல்
பூவெடுத்து மாலைகட்டிப் பூசைவைக்கும் பொங்கல் - எங்கள்
பூபதியாம் கண்ணகையாள் புன்னகைக்கும் பொங்கல்
நாதஸ்வரம் தவில் முழங்க ஊரெடுக்கும் பொங்கல் - அம்மா
நாங்களெல்லாம் பிணி அகலத் தீர்த்தமாடும் பொங்கல்

நல்ல நல்ல பொங்கல்
நன்றி சொல்லும் பொங்கல்
வல்ல எங்கள் கண்ணகியை
வாழ்த்திப்போற்றும் பொங்கல்

* அரச இசை விருது விழா - 2014ல் அரச விருது பெற்ற பாடல்



"காலமது கனிந்துவைத்த கலைமனசாம் - நல்ல
கவிதைத்தமிழ் செதுக்கிவரும் கவிஞனுமாம்
மூலமெனும் தமிழினத்தின் மூச்சாய் வாழ்ந்து - பல
முள்வலிகள் கடந்துவரும் பயணியுமாம்
சீலமிகு தமிழ்த்தாய்க்குப் புதல்வனுமாம் - இனிய
செம்மைமிகு பண்புகொண்ட ஆளுமையாம்
வேலணையாம் வித்தகக் கவிஞன் சுரேஷ் எனும் - இந்த
நூலழகன் எழுத்தெல்லாம் வீரியமாம்"

கவிஞர் கு. வீரா

ISBN 978-955-42692-0-0

வெளியீடு:
வர்ணம் கிரியேஷன்ஸ்